REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

2023 பெப்ரவரி 21 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினකරන්

1932 - 2022

வரு. 91 இல. 44 | Tuesday 21, February, 2023 | 12பக்கங்கள் | 50/-







# வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கடகல நகரம்; பாரிய அபிவிருத்தி



## ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஏகமனதாக அங்கீகாரம்

வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கடகல நகரை முழுமையாக அபிவிருத்தியடைந்த நகரமாக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, கட்டுகஸ்தோட்டைக்கு செல்லும் மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

கட்டுகஸ்தோட்டை, கண்டி மற்றும் குண்டசாலையை மையமாகக் கொண்ட விசேட அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை, கண்டி மாவட்ட அபிவிருத்திக் குழு, மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைச்சர்கள், நகர திட்டமிடல் துறை

04

### நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டம்

## பூரண ஒத்துழைப்பு வழங்க ஜப்பான் ஜெய்க்கா நிறுவனம் உறுதி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டம் சாத்தியமானதாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் எதிர்காலத்தில் அதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகத்தின் (ஜெய்க்கா) தெற்காசிய திணைக்கள பணிப்பாளர் நாயகம் டெருயுகி இடோ தெரிவித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கும் ஜெய்க்கா பணிப்பாளர் நாயகத்துக்கு

04

## மின்னல் தாக்கி இரண்டு மாடி கட்டடத்தில் 'தீ'

### கொஸ்வத்தை பகுதியில் சம்பவம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையில் மின்னல் தாக்கம் காரணமாக கொஸ்வத்தை பகுதி வீடொன்று தீப்பற்றிக் கொண்டுள்ளதுடன் நபர் ஒருவரும் தீக் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

04

## தேர்தலை ஒத்திவைக்க கோரிய மனுமீது 23க்கு பின் விசாரணை

### உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



உள்ளூராட்சி சபைத் தேர்தல் வாக்களிப்பை ஒத்திப்போடுமாறு உத்தரவிடக்கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் டபிள்யூ. எம். ஆர். விஜயசுந்தரவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணையை 23ம் திகதிக்குப் பின்னர் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே மேற்படி மனுவைப் பரிசீலனை

04

### போதியளவு நிதி கிடைக்காத காரணத்தால்

## தேர்தலை குறித்த தினத்தில் நடத்த முடியாத சூழ்நிலை

### நீதிமன்றத்திற்கு தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



போதியளவு நிதி மற்றும் ஏனைய வசதிகள் உரிய காலத்தில் கிடைக்காததால் ஏற்கனவே தீர்மானித்திருந்தபடி எதிர்வரும் மார்ச் 9ம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியாது

04

## மின்சார சபை, CPC மறுசீரமைப்பு; துரிதமாக மேற்கொள்ள ஏற்பாடு

### அந்தந்த நிறுவனங்களுக்கு அரசு பணிப்புரை

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

மின்சார சபை மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு அந்த நிறுவனங்களுக்கு அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளது.

மேற்படி இவ்விரண்டு நிறுவனங்களையும் புதிய அறவீட்டு முறைமையின் கீழ் இலாப மீட்டும் நிறுவனங்களாக முன்னேற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு

04

### பாராளுமன்றம் இன்று கூடுகிறது;

## 04 கட்டளை சட்டங்கள் மீதான விவாதம் இன்று

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



இலங்கை தேயிலை சபை உள்ளிட்ட நான்கு கட்டளைச் சட்டங்கள் இன்று பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் இன்று காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ள

04

## தபால் திணைக்களத்தில் சுமார் 2000 வெற்றிடம்

### ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டுள்ளதால் அவதி

தபால் திணைக்களத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாக பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்ஹ தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அரச சேவையில் ஆட்களை இணைத்துக் கொள்வது நிறுத்தப்பட்டுள்ளதால் அத்தியாவசிய சேவைக்காக அரச சேவையில் உள்ளவர்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

218 பேருக்கு பதவியுயர்வு வழங்கி அவர்களுக்கான பயிற்சி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

04

## மாணவர்களை குறிவைத்து போதைப் பாக்கு விற்பனை

### கோப்பாய் CID யினரால் ஒருவர் கைது




யாழ். கோண்டாவில் பகுதியில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் கலந்த பாக்கு விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (19) கோப்பாய் குற்றத்தடுப்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கோண்டாவில் பகுதியில்

04

## மனித நுகர்வுக்கு தகுதியற்ற 18 % சிற்றுண்டிச்சாலைகள்

### சுற்றிவளைப்புகளில் PHI சங்கம் கண்டுபிடித்தது



இலங்கையிலுள்ள சுமார் 18% உணவகங்கள் திருப்தியற்ற நிலையில் உள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் (PHI) சங்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார். அங்கு மனித நுகர்வுக்குத் தகுதியற்ற

04

## கரைதுறைப்பற்றை TNAக்கு விட்டுக்கொடுத்த SLMC

### இன ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு என்கிறார் ஹக்கீம்



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய தேசிய கூட்டமைப்பில் இலங்கை தமிழரசு கட்சி போட்டியிட எடுக்கப்பட்டுள்ள தற்காலிக ஒன்றிணைவுத்

04

## ஐஸுடன் கைதான நபருக்கு வந்த 50 தொலைபேசி அழைப்புகள்

### ஹலவத்த உடப்புவ பொலிஸார் அதிர்ச்சி



ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞனிடம் இருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசியில் ஐஸ் போதைப்பொருளைக் கேட்டு சுமார் 50 பேர் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டுள்ளதாக ஹலவத்த உடப்புவ பொலிஸார் தெரிவித்தனர். 23 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் இந்த அழைப்புகள் வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

04

## வட, கிழக்கு தேர்தல்களில் BJP போட்டியிடலாம்

### ஆச்சரியப்பட முடியாது என்கிறார் விமல் வீரவன்ச



வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் காலங்களில் தேர்தல்களின் போது மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி போட்டியிட்டாலும் நாம் அதிர்ச்சியடையத் தேவையில்லை என்ற நிலையே தற்போது காணப்படுகின்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தலைவராக மோடி எப்போது பிரகடனப்படுத்தப்பட்டார்? அண்ணாமலையின்

04

## சரண குணவர்தன பிணையில் விடுதலை

### மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு



தேசிய லொத்தர் சபையின் தலைவராக கடமையாற்றும்போது, தேசிய லொத்தர் சபைக்குச் சொந்தமான மூன்று வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பிரதியமைச்சர் சரண குணவர்தனவை

04

### சிவனொளிபாத மலைக்கு யாத்திரை

## சென்ற பஸ் பாரிய விபத்தில்! இரு பெண்கள், ஒரு ஆண் பலி;

### 21 பேர் படுகாயம் ஐவர் கவலைக்கிடம்



**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

நல்லதண்ணியிலிருந்து கொழும்பு மஹரகம நோக்கி சிவனொளிபாத மலை யாத்திரிகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற தனியார்

04

## தேர்தலுக்குப் பின்னர் மீண்டும் மக்கள் சேவை

### பாடசாலைகளுக்கு பஸ்களும் வழங்கப்படும்



பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியை விடுத்து ஏனைய கட்சிகள் ஆட்சியில் இல்லாத போது மக்களுக்கு எதனையும் செய்யவில்லை எனவும், ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி கடந்த 3 ஆண்டு காலத்தில் எதிர்கட்சியில் இருந்து கொண்டு மூச்சு மற்றும்

04

## தனியார் சொத்துக்களை கையகப்படுத்துமா SJB?

### எதிர்க்கட்சியிடம் அனுர குமார கேள்வி



ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தனியார் சொத்துக்களை கையகப்படுத்துமென சஜித் உட்பட எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் தெரிவித்து வருவதை ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க மறுத்துள்ளார். 1980ஆம் ஆண்டு

04

## யாழ் ராணி புகையிரதத்துடன் CTB பஸ், கார் மோதி விபத்து

### நால்வர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதி



கிளிநொச்சி அறிவியல் நகர்ப் பகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களை இறக்கி விட்டு, மீண்டும் திரும்பிக் கொண்டிருந்த இ.போ.சபையின் பருத்தித்துறை நிலையத்துக்குச் சொந்தமான பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த புகையிரதத்தோடு மோதி நேற்று காலை 8.10 மணியளவில் விபத்துக்குள்ளானது.

பஸ்ஸின் முன் பகுதியை யாழ். ராணியின் புகையிரத இயந்திரம் மோதித்தள்ளியுள்ளது. இதில் நடத்துனர் காயமடைந்துள்ளார்.

04

# கிழக்கின் குரல்



## வெள்ளம் பெருக்கெடுத்ததால் நிறுவனங்கள், பாடசாலைகளின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

(வாச்சிக்குடா விஷேட நிருபர்)



அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களில் பலத்த மழை பெய்து வருவதால், மாவட்டத்தின் பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல பிரிவுகள் வெள்ளத்தில் மூழ்கி, சில குடியிருப்புக்களிலும் வெள்ளம் புகுந்துள்ளது.

இதேநேரம், அரச, அரச சார்பற்ற திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகள் சிலவற்றிலும் வெள்ளம் புகுந்ததால் அன்றாட செயற்பாடுகளும் ஸ்தம்பித்தன.

சில பகுதிகளை வெள்ளம் முற்றாகச் சூழ்ந்துள்ளதால், வீதி அருகிலுள்ள வடிகான்களை அவதானிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால், சிலர் கானுக்குள் தவறி விழும் நிலையும் ஏற்பட்டுள்ளது. அறுவடைக்குத் தயாராகவிருந்த வயல் நிலங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, அறுவடைகளும் தடைப்பட்டுள்ளது.

இந்நிலையில், விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆலையடிவேம்பு பிரதேசத்தின் பிரதான நீர் வெளியேற்றப்படும் சின்னமுகத்துவாரம் உடைப்பெடுத்து நீர் வெளியேறுவதால், வெள்ள அனர்த்தம் சற்று குறைவடையும் நிலையையும் அவதானிக்க முடிகின்றது.

இது இவ்வாறிருக்க ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி. பபாகரன் தலைமையிலான குழுவினர், வெள்ள அனர்த்த நிலை தொடர்பில் நேரில் சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டனர். இந்நிலை தொடர்பில், மாவட்ட செயலகத்திற்கு அறிவித்துள்ளதுடன் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வெள்ள அனர்த்தம் ஏற்படும் பட்சத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பிலும் அதிகாரிகளுக்கு தெளிவூட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மழை பெய்யுமானால், தாழ்நிலப்பகுதியில் வாழும் மக்கள் இடம்பெயர்ந்து செல்லும் நிலை ஏற்படலாம் எனவும் அஞ்சப்படுகிறது. இந்நிலை ஏற்படின், இடம்பெயர்வோருக்குரிய நிவாரணப்பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## விவசாய உபகரணங்கள் வழங்கிவைப்பு



(கிண்ணியா தினகரன் நிருபர்)

கிண்ணியா பிரதேச செயலகத்தில் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் திங்கட்கிழமை (20) வழங்கி வைக்கப்பட்டன. கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச்.எம்.கனி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சூரங்கல் கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த விவசாய பயனாளிகளுக்கு முதற் கட்டமாக இவ்வுதவி வழங்கப்பட்டது.

## மாளிகைக்காடு ஜனாஸா மையவாடிக்கு மாற்று இடம் தருமாறு மகஜர்கள்

(சாய்ந்தமருது விசேட நிருபர்)

அம்பாறை மாவட்ட மாளிகைக்காடு பிரதேச ஜனாஸா மையவாடி கடலரிப்புக்குள்ளாகி பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது. இதனால், உடனடியாக மாற்று இடம் தருமாறு கோரி மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன.

ஜனாதிபதி, பிரதமர், காணிய மைச்சர், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் உட்பட பலருக்கு இந்த மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாணத்தின் அம்பாரை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச செயலகம் மற்றும் காரைதீவு பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட மாளிகைக்காடு கிராம மக்களின் ஜனாஸா மையவாடி கடலரிப்பில் முழுமையாக சேதமாகியுள்ளது. இதனால், ஜனாஸாக்கள் கடலில் அள்ளுண்டு போயுள்ளன. இவ்விடயம் தொடர்பில் கடந்த காலங்களில் சுட்டிக்காட்டப்பட்டது.

மாளிகைக்காடு மக்கள் முழுமையாகவும், சாய்ந்தமருது மக்கள் சில பகுதியினரும் அடங்கலாக 10,000 பேர், இந்த மையவாடியை பாவித்து வந்தனர்.

தற்போது கடலரிப்பு ஏற்பட்டுள்ளதால், இதைப்பாவிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சுமார் 90 இலட்சம் ரூபா நிதியில், சில மாதங்களுக்கு முன்னர் இங்கு கட்டப்பட்ட தடுப்புச் சுவர், கடலில் முழுமையாக அடித்துச் செல்லப்பட்டுள்ளது என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாளிகைக்காடு அல் மீஸான் பௌண்டஷன், உள்ளிட்ட முக்கிய அமைப்புக்கள் இவ்விடயம் தொடர்பில் அவசரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

## காயமடைந்த காட்டு யானைக்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு கொம்மாதுறை தீவுப் பகுதியில் பத்து நாட்களாக காயமடைந்து, உயிருக்குப் போராடும் காட்டு யானைக்கு சிசிச்சையளிக்கப்பட்டு வருறது.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொம்மாதுறை தீவுப் பகுதியில் காட்டு யானை ஒன்று, காலில் உண்டான காயத்தால் நடக்க முடியாமல் பரிதவிக்கிறது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியே இந்த யானை காயமுற்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

விழுந்து கிடந்த நிலையில் உயிருக்கு போராடும் இந்தக் காட்டு யானையை மட்டக்களப்பு வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் உணவளித்து பராமரித்து வருகின்றனர்.

இதையடுத்து அம்பாரை வனஜீவராசிகள் திணைக்களத்தின் வைத்தியர் நிஹால் புஷ்பகுமார தலைமையிலான வைத்திய குழாமினர் இந்த யானைக்கு சிசிச்சையளித்தனர்.

இதே வேளை, ஒரே பக்கமாக கீழே, வீழ்ந்து கிடக்கும் யானையை மற்றைய பக்கம் புரட்டுவதற்கு கனரக இயந்திர உதவியுடன் முயற்சித்தபோதும், அது முடியாமல் போயுள்ளது.

## பிரபல அறிவிப்பாளர் இர்பானின் தந்தை காலமானார்

(அக்கரைப் பற்று மத்திய நிருபர்)



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவிப்பாளரும், பிரபல பாடகருமான எம்.ஐ. இர்பானின் தந்தையான முஹம்மது அசனார் முகம்மது இஸ்மாயில் (நூறு வயது) நேற்று (20) காலமானார்.

அக்கரைப்பற்று 12, அன்பு வீதியில் வசித்து வந்த இவர், சரிபுத்தம்பி சுபைதா உம்மாவின் கணவராவார். எட்டுப் பிள்ளைகளின் தந்தையான இவருக்கு நான்கு ஆண் பிள்ளைகளும் நான்கு பெண் பிள்ளைகளும் உள்ளனர்.

ஜனாசா நேற்று (20) திங்கட்கிழமை அக்கரைப்பற்றில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## போதைவஸ்துக்கு எதிரான விழிப்புணர்வு பதாகை திரை நீக்கம்

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

பாலமுனை பிரதான வீதியில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தில் "போதையற்ற பாலமுனை" எனும் போதைவஸ்துக்கு எதிரான விழிப்புணர்வுப் பதாகை திரைநீக்கம் செய்யப்பட்டது.

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்வு (19) ஞாயிற்றுக்கிழமை நடந்தது. பாலமுனை இளைஞர்கள் சபையின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாலமுனை போதைத் தடுப்பு பிரிவின் இணைப்பாளரும் திருக்கோயில் பிரதேச செயலக உளவள ஆலோசக உத்தியோகத்தருமான எஸ். ஆப்தின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஆலோசகர்களான அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையின் சட்ட வைத்தியர் எஸ். எம்.றிபாஸ்தின், தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஏ.எச். றிபாஸ், பொறியியலாளர் எம்.எச். நௌசாட் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டு வைபவ ரீதியாக பதாகையை திரை நீக்கம் செய்து வைத்தனர்.

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் பாலமுனை பிரதேசத்தில் கல்வி, சுகாதார மேம்பாடு மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டில் வாழும் மக்களுக்கான பல்வேறு வேலைத் திட்டங்களையும் இவர்கள் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## குச்சவெளி தவிசாளர் தலைமையில் மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு



(கந்தளாய் தினகரன் நிருபர்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (20) நடைபெற்றது.

குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாரக்கின் தலைமையில், பிரதேசசபையின் செயலாளர் திருமதி மாலினி அசோக்குமாரின் வழிநடத்தலில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில், திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு ஏ.ஜி.எஸ்.எல்.தென்னகோன் பிரதம அதிதியாக வும், குச்சவெளி பிரதேச கோட்டக்கல்வி அதிகாரி திரு எஸ். மதியழகன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பகுதி மாணவர்களுக்கிடையில், இப்போட்டி நடாத்தப்பட்டது.

"வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்" எனும் தொனிப்பொருளில், இப்போட்டி நடாத்தப்பட்டது.

## ஸஹீஹுல் புஹாரி மஜ்லிஸ் இறுதி நிகழ்வுகள்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி 3 முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப்பள்ளிவாசல் மற்றும் காத்தான்குடி 5 ஜாமியுழ்ழாபிரின் ஜும்ஆப்பள்ளிவாசல்களில் கடந்த ஒரு மாத காலமாக ஓதப்பட்டு வந்த ஷஹீஹுல் புஹாரி மஜ்லிஸ் (18) சனிக்கிழமை இரவுடன் நிறைவு பெற்றது.

ஜனவரி 19ம் திகதி ஆரம்பமான இந்த ஹதீஸ் மஜ்லிஸ், கடந்த ஒரு மாதகாலமாக இடம்பெற்று சனிக்கிழமை (18) இரவுடன் நிறைவடைந்தது.

மஜ்லிஸ் நிறைவு நிகழ்வில் புனித அல்குர்ஆன் ஓதப்பட்டதுடன் ஷஹீஹுல் புஹாரி ஹதீஸ் கிரந்தத்தின் இறுதி ஹதீஸ் வாசிக்கப்பட்டு விஷேட துஆப்பிராத்தனை, விஷேட உரைகளும் இடம் பெற்று அன்னதானமும் வழங்கப்பட்டது.

காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப்பள்ளிவாசலில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது, புனித அல்குர்ஆன் மனனப் பிரிவு மதரஸாவில் அல்குர்ஆனை முழுமையாக மனனம் செய்த மாணவனுக்கு பள்ளிவாசல் நிர்வாகம் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கியது.

இந்நிகழ்வுகளில் உலமாக்கள், பள்ளிவாசல் நிருவாகிகள், முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டனர்.

## அம்பாறையில் அடை மழை, அறுவடைக்கு தயாரான நெற்காணிகள் வெள்ளத்தில் மூழ்கின

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக இரண்டு நாட்களாக பெய்து வரும் மழையால், அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்காணிகள் நீரில் மூழ்கியுள்ளன. மேலும், இப்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் வளாகங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

இப்பகுதியில், கடந்த இரண்டு நாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக இப்பிரதேசத்தில், குறிப்பாக அட்டாளச்சேனைப் பிரதேசத்தில் அறுவடைக்குத் தயாராக இருந்த 1700 ஏக்கர் நெற்காணிகள் முற்று முழுதாக மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது

## அம்பாறை மாவட்ட கூட்டுறவு சங்க சமாசத்தின் வழிகாட்டி வளவாளராக கலாநிதி ஜெயமுருகன்

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாசத்தின் வழிகாட்டி வளவாளராக கலாநிதி வை.ஜெயமுருகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் பணிப்பாளர் சபை கூடி இதற்கான தீர்மானத்தை எடுத்ததுடன், இதுபற்றி கலாநிதி ஜெயமுருகனுக்கு சம்பிரதாயபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த கலாநிதி ஜெயமுருகன், கூட்டுறவு துறை நிபுணராவார். ஜப்பான், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட பல நாடுகளில், இவர் உயர் நிலை பதவிகள் வகித்தமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நெதர்லாந்து மனித நேய கூட்டுறவுச் சங்கத்தின் உயிர் நாடிகளில் ஒருவராக செயற்பட்டு, அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்னின்று உழைத்துமிருந்தார்.

இந்நியமனத்தை தொடர்ந்து சமாசத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் முன்னிலையில் கலாநிதி ஜெயமுருகன் உரையாற்றினார். இதில், அவர் குறிப்பிட்டதாவது,

அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது ஒரு குழந்தையை பெற்று வளர்ப்பதற்கு ஒப்பானது. இதய சுத்தி, தூர நோக்கு, தீர்க்கதரிசனம், சாதுரியம் ஆகியவற்றுடன் இது மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்கான நிபுணத்துவ வழிகாட்டல்களை வழங்குவதற்கு நான் தயாராகவே உள்ளேன். கல்முனை சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசத்தில் அங்கம் வகிக்கின்ற சங்கங்களின் செயற்பாட்டாளர்களை நேரில் சென்று சந்தித்து பேசினேன்.

அவர்களுடைய ஆர்வம், எதிர்பார்ப்பு, தேவை ஆகியவற்றை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. முன்னதாக திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு சென்று அங்குள்ள சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கத்தினரையும் சந்தித்தேன் என்றார்.

## குப்பைகள் நிறைந்து தடைபட்ட வடிகான்



அட்டாளைச்சேனை ஜலால்தீன் வீதியிலுள்ள வடிகானுக்குள் குப்பைகள் நிறைந்துள்ளதால், நீர் வடிந்தோட முடியாதுள்ளது. குப்பைகள் நிறைந்துள்ள வடிகானைப் படத்தில் காணலாம். (படம்: பாலமுனை தினகரன் நிருபர்

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 பெப்ரவரி 21 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN



தொழுகை நேரம்
சுபஹ் - 05.11
ளுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் மாசி 09
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

உள்ளூராட்சி சபைகளின் SLPP

## தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இன்று பசிலுடன் சந்திப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)




அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்குமான உத்தியோகபூர்வமான ஆட்சிக் காலம் எதிர்வரும் மார்ச் 19ம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் முக்கிய பேச்சுவார்த்தையொன்றுக்காக பொதுஜன பெரமுன கட்சியின் அனைத்து உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் இன்று கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

அதற்கிணங்க, பொதுஜன பெரமுக கட்சி சார்ந்த உள்ளூராட்சி சபைகளின் அனைத்து தலைவர்களும் உறுப்பினர்களும் முன்னாள் அமைச்சரும், கட்சியின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ஷவின் தலைமையில் இன்று நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

பசில் ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறும் இந்த முக்கிய கூட்டத்தின் போது கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த கூட்டமானது இன்றைய தினம் கொழும்பு நெலும் மாவத்தையில் உள்ள பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையத்தில் நடைபெறவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## அரசாங்க அச்சகத்திற்கு பொலிஸ், இராணுவம் கூடுதல் பாதுகாப்பு

### அச்சகத்தின் தலைவி கங்காணி கல்பனா லியனகே தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்




கொழும்பிலுள்ள அரசாங்க அச்சகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நேற்றைய தினம் முதல் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அச்சகத்தின் தலைவி கங்காணி கல்பனா லியனகே தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்பு பேரணிகளை நடத்திய நிலையில் அரசாங்க அச்சகத்தின் பாதுகாப்பை கவனத்திற்கொண்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் வழமையான கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டைப் பகுதியில் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று அரசாங்கத்திற்கெதிரான ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது. இதனால் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிப்படைவதை தவிர்க்கும் வகையில் நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் அதனையும் மீறி ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகங்களை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

## மலையேற முயன்று வழிதவறிய 33 பேர்

### பொலிஸார், இராணுவம் இணைந்து மீட்பு

உடுதும்பர நக்கிள்ஸ் சரணாலயத்திற்குட்பட்ட கெரடிகல மலையில் ஏறும் போது வழிதவறிய 33 இளைஞர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடும் மழை மற்றும் பனிமூட்டம் காரணமாக மலையேறச் சென்றவர்கள் திரும்ப முடியாமல் வழிதவறிச் சென்றதாக உடுதும்பர பொலிஸாருக்கு தகவல் கிடைத்திருந்தது.

அதன்படி, பொலிஸ் அதிகாரிகள், வன பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் இணைந்து அந்த குழுவைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

அங்கு சிக்கியிருந்த 31 இளைஞர்கள் மற்றும் இரண்டு யுவதிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கண்டி, ஹோமாகம, கொழும்பு மற்றும் காலி ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் எனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## தேர்தல் நடத்துவதற்கான தீர்மானத்தை ஆணைக்குழுவே மேற்கொள்ளவேண்டும்

### ஜனாதிபதியோ வேறு எவருமோ அந்த நடவடிக்கைகளில் தலையிட முடியாது - பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர்

லோரன்ஸ் செல்வநாயகம்



தேர்தல் நடத்துவதற்கான தீர்மானத்தை தேர்தல் ஆணைக்குழுவே மேற்கொள்ளவேண்டுமென்றும் தேர்தலை அடுத்தவருடம் நடத்துவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தால் அது தொடர்பில் கவலையடைவதாகவும் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம்.பி தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவதற்கான பொறுப்பான நிறுவனமாக தேர்தல் ஆணைக்குழு செயற்படும் நிலையில் அதன் நடவடிக்கைகளில் ஜனாதிபதியோ அல்லது வேறு எந்த நபர்களோ தடையிடமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ராஜபக்ஷாக்களுக்கு தேர்தலை பிற்போடுமாறு தெரிவித்த எந்த குற்றச்சாட்டும் காணப்படவில்லையென்றும் அவ்வாறு ராஜபக்ஷாக்களுக்கு குற்றச்சாட்டுகள் இருக்குமாயின் அது குறித்த காலத்திற்கு முன்பதாக தேர்தலை நடத்திய தற்கானதாகவே அமைந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, உள்ளூராட்சி சபை தேர்தலை முறையற்ற விதத்தில் ஒத்திப்போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் முதலில் பொதுஜன பெரமுன வீதியில் இறங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் மக்களுக்கான உரிமையாகும் என்றும் உள்ளூராட்சி சபைகளை கலைப்பதற்கு முன்னின்று செயற்பட்ட சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் இன்று உள்ளூராட்சி சபை தேர்தலை கோரி நிற்பதாகவும் தெரிவித்துள்ள அவர், மாகாண சபை தேர்தலை ரத்துச் செய்வதற்கான நிலைமைக்காக அப்போது பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னின்று செயற்பட்டனர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் ஆர்ப்பாட்டம்; மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிப்பு

### ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸாரினால் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம்

லோரன்ஸ் செல்வநாயகம்

உள்ளூராட்சி சபை தேர்தலை உரிய தினத்தில் நடத்தக்கோரி ஐக்கிய மக்கள் சக்தி நேற்று கொழும்பில் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தினால் மக்களின் அன்றாட செயற்பாடுகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையிலும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் மருதானை டெக்னிக்கல் சந்திக்கருவில் பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர். அதேவேளை, மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கும் வாகனப் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் வன்முறைகளற்ற விதத்தில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளுமாறு கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்திருந்தது. அத்துடன் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதியமைச்சு, காலிமுகத்திடல் சுற்றாடல் பகுதிகளுக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரவேசிக்கக்கூடாதென்றும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. அந்த உத்தரவை பொலிஸார் அறிவித்திருந்த போதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த உத்தரவை மீறி செயற்பட்டதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரினால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பு கோட்டை பகுதியை நோக்கி பிரவேசிக்க முற்பட்ட நிலையிலேயே பொலிஸாரினால் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த

## இந்திய விசா மத்திய நிலையம் மீண்டும் ஆரம்பம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பாதுகாப்பு காரணங்களுக்காக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த கொழும்பிலுள்ள இந்திய விசா மத்திய நிலையம் நேற்றுமுதல் மீண்டும் திறக்கப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க இன்று முதல் விசா பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய சேவைகளும் வழமையான வகையில் முன்னெடுக்கப்படும் என்றும் அந்த தூதரகம் தெரிவித்தது.

கொழும்பிலுள்ள இந்திய விசா மத்திய நிலையம் பாதுகாப்பு காரணங்களுக்காக கடந்த பெப்ரவரி 15ம் திகதி முதல் தற்காலிகமாக மூடப்பட்டது. மறுஅறிவித்தல் வரை அது மூடப்பட்டிருக்குமென அன்றைய தினம் இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்திருந்த நிலையில் நேற்று மீண்டும் அந்த மத்திய நிலையம் கடமைகளுக்காக திறக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட

## வாகன உதிரிப்பாகங்கள் சுங்கத்தினால் அழிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

வெளிநாடுகளிலிருந்து சட்ட விரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருந்த வாகன உதிரிப்பாகங்கள் ஒரு தொகையை நேற்று அழித்துள்ளதாக சுங்க திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவ்வாறு கொண்டு வரப்பட்டுள்ள வாகன உதிரிப்பாகங்கள் சந்தைக்கு

விநியோகிக்கப்படும் போது, அது பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டு அதனால் நாட்டில் தர நிர்ணயமற்ற வாகனங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படலாம் என்ற காரணத்தினாலேயே மேற்படி உதிரிப்பாகங்களை அழித்துள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த 5 வருடங்களாக நாட்டுக்கு இவ்வாறு சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்டிருந்த வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களே ஒருகொடவத்தையிலுள்ள சுங்கத் திணைக்களத்திற்கு சொந்தமான முனையத்தில் வைத்து அழிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் பாரியளவில் அரச உடமையாக்கப்பட்டு சுங்கத் திணைக்களத்திற்கு சொந்தமான களஞ்சியசாலையில் பாதுகாக்கப்பட்டு வந்தன. அவற்றில் 100 தொகுதிகளே நேற்று இவ்வாறு அழிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

04

## கைத்துப்பாக்கியுடன் வெளிநாடு செல்ல முயற்சித்த நபர் கைது

### விமான நிலையத்தில் பொலிஸார் அதிரடி



கைத்துப்பாக்கியுடன் வெளிநாடு செல்ல முயற்சித்த நபர் ஒருவரை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் (19) கைது செய்துள்ளதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

விமான நிலையத்தில் இருந்து பஹ்ரைனுக்கு செல்வதற்கு கைத்துப்பாக்கியுடன் வந்த கம்பளையைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரையே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பளையைச் சோந்த குறித்த நபர் சம்பவதினமான நேற்று முன்தினம் பஹ்ரைனுக்கு பகல் 2.15 மணிக்குரிய விமானத்தில் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றுள்ளார்.

அங்கு விமான நிலைய முதல் சோதனைச் சாவடியில் அவரின் பையை விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஸ்கானிங் செய்த போது பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டு குறித்த நபரை கைது செய்ததுடன் கைதுப்பாக்கியை மீட்டுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணையை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊடகவியலாளர் அப்துல்லாஹ் அஸாமின் மறைவிற்கு அனுதாபம்

### ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்



அல்ஹஸனாத் சஞ்சிகை மற்றும் எங்கள் தேசம் பத்திரிகை ஆகியவற்றின் முன்னாள் நிர்வாக ஆசிரியரும் ஜஸ்ட் மீடியா பவுண்டேஷனின் முன்னாள் முக்கிய பிரதானியும் எழுத்தாளரும் நூலாசிரியரும் பதிப்பாசிரியருமான அஷ்ஷெய்க் ஆர். அப்துல்லாஹ் அஸ்ஸாம் அவர்கள் கடந்த சனிக்கிழமை (18) தனது 53ஆவது வயதில் கொழும்பில் காலமானார், இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹிராஜிஊன். அவரது ஜனாஸா புத்தளம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அச்சு ஊடகப் பணியில் முனைப்புடன் ஈடுபட்டு வந்த அப்துல்லாஹ் அஸ்ஸாம் பல ஊடகவியலாளர்களை உருவாக்குவதில் மறைகரமாக இருந்து பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அல்ஹஸனாத், எங்கள் தேசம் பத்திரிகைகளில் பல புதியவர்களுக்கு களம் கொடுத்து அவர்களை எழுத்தாளர்களாக, செய்தியாளர்களாக, கவிஞர்களாக, பத்தி எழுத்தாளர்களாக மாற்றிய பெருமை அவரைச் சாரும். அது மட்டுமன்றி, மாணவர்களுக்கான அகரம் சஞ்சிகையின் ஆரம்பம், அதன் வளர்ச்சிக்கு பூரண ஒத்துழைப்பு நல்கியவர்.

பல நூல்களை பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இறுதி மூச்சு வரை அமைதியாக ஊடகப் பணி புரிந்த அவர், ஓர் ஆலிமாகவும் தனது சன்மார்க்கப் பணிகளை முன்னெடுத்து வந்தார்.

எல்லோருடனும் மிகவும் இனிமையாகவும் அன்பாகவும் பழகக்கூடிய நல்லுள்ளம் கொண்ட அவரது பாவங்களை மன்னித்து அவரது அத்தனை நற்கருமங்களையும் ஏற்று அங்கீகரித்து உயர்ந்த சுவனபதியை வழங்கவும் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்களுக்கு அழகிய பொறுமையை வழங்கவும் பிரார்த்திப்போம் என மீடியா போரம் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி தேர்தல் ஒத்திப்போடப்பட்டால்

## போட்டியிடும் 3000 அரச ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை

### பொதுநிர்வாக அமைச்சு சுற்றறிக்கையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுக் கொண்டு உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்வந்துள்ள அரச ஊழியர்கள் தேர்தல் ஒத்திப்போடப்பட்டால் மூன்று மாதங்கள் வரை சேவைக்கு சமுகமளிக்கமுடியாது என பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஒத்திப்போடப்பட்டாலும் வேட்புமனு தாக்கல்செய்த தினத்திலிருந்து மூன்று மாதங்கள் நிறைவுறும் வரை வேட்பாளர் சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுக்கொள்ள முடியும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு மூன்று மாதங்கள் நிறைவடைந்த பின்னர் அவ்வாறு தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள அரசாங்க ஊழியர்கள் மீண்டும் தாம் முன்பு கடமைபுரிந்த நிறுவனத்திற்கு சேவைக்காக சமுகமளிக்க வேண்டும் என்றும் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறை உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவதற்காக சுமார் 3000 அரசாங்க ஊழியர்கள் வேட்புமனு தாக்கல்செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை
2023.02.19
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5036
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 35,030,294.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 5 0 1 9 6 2

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1066
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,146,800.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 22 25 51 61

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1491
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,973,834.80
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 8 6 8 1 5 2

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 345
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,585,976.60
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 03 21 24 39
விசேட இலக்கினம் விருச்சிகம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1384
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 301,749,582.00
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 22
வெற்றி இலக்கங்கள் 01 46 52 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

கொவிசெத
Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3278
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,087,204.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 21 53 56 67



தந்தை செல்வா நற்பணி மன்ற அறநெறி பாடசாலையின் 90சிவராத்திரி பூஜையும் சிவராத்திரி கலைநிகழ்களும் மத்திய கொழும்பு இந்து வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றன. இதில் சிறப்பு விருந்தினராக ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சிவரஞ்சன் கலந்து கொண்டார்.



சிவராத்திரி தினத்தன்று உடப்பு தமிழ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலை நிகழ்வில், உடப்பு கிராமத்தைச் சேர்ந்த ஓவியரும் சித்திர ஆசிரியருமான க.முத்துக்குமார் கௌரவிக்கப்பட்டார். இவருக்குரிய சான்றிதழை உடப்பூர் இந்து நெறிக்கழகத் தலைவர் பா.முருகானந்தன் வழங்கி வைத்தார். உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் க.பொ.த(சா.த),(உ.த) வகுப்பு மாணவர்களின் 100 வீத சித்திக்காக இவர் அர்ப்பணிப்புடன் சேவையாற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



அறிவியல் மாற்றம் சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் (SCSDO) (கலிபோர்னியா அமெரிக்காவின்) ஏற்பாட்டில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார அரங்கில் துறைசார் ஆளுமைக்கான விருது வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்டம் தோறும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 44 கலைத்துறை பன்முக ஆளுமைகள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இவ்விழாவை நிறுவனர் திருக்கேதீஸ்வரன் குருசாமி தலைமை தாங்கி நடத்த முதன்மை விருந்தினராக பேராசிரியர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக வவுனியாப் பல்கலைக்கழகம் உபவேந்தர் கலாநிதி.த.மங்களேஸ்வரன் கலந்து கொண்டார்.

## வாகன உதிரிப்பாகங்கள்... 03ஆம் பக்கத் தொடர்

அதற்கிணங்க சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் திணைக்களத்தின் வருமான கண்காணிப்பு பிரிவு உத்தியோகத்தர்களே நேற்று இந்த உதிரிப்பாகங்களை அழித்துள்ளதாக சுங்கப் பணிப்பாளர் (கண்காணிப்புப் பிரிவு) டீ.பி.என்.சமரதுங்க தெரிவித்துள்ளார்.

## மின்னல் தாக்கி...

எவ்வாறாயினும் காயமடைந்தவரின் நிலைமை கவலைக்கிடமில்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். நேற்று பிற்பகல் இந்தச் சம்பவம் நாவல கொஸ்வத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்ததுடன் கோட்டை மாநகர சபைக்கு சொந்தமான தீயணைப்பு வாகனங்கள் உடனடியாக மேற்கொண்ட நடவடிக்கையினால் தீப்பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்ததாகவும் தெரிவித்துள்ளனர். நாவல கொஸ்வத்தை பகுதியில் உள்ள இரண்டு மாடி வீட்டிலேயே இவ்வாறு தீப்பரவல் ஏற்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## பூரண ஒத்துழைப்பு...

மிடையில் நேற்றைய தினம் விசேட கலந்துரையாடலொன்று கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையின் போது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், அதற்காக அரசாங்கம் மேற்கொண்டு வரும் வேலைத் திட்டம் தொடர்பிலும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெளிவுபடுத்தியுள்ளார்.

ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்பே மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தற்போதைய அரசாங்கத்தின் காலத்திலேயே கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருவதையும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பின் மூலம் நாட்டில் ஏற்படும் பொருளாதார உறுதிப்பாடு தொடர்பில் நாட்டு மக்கள் உறுதியான நம்பிக்கை வைத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார்.

## தேர்தலை ஒத்திவைக்க...

செய்வதற்காக எதிர்வரும் 23ம் திகதியை உயர்நீதிமன்றம் தீர்மானித்திருந்தது. அதற்கிணங்க, 23ம் திகதிக்கு முன்பதாக அந்த மனு மீதான விசாரணையை மேற்கொள்ளுமாறு மனுதாரர் தாக்கல் செய்த மற்றுமொரு மனுவை கவனத்திற் கொண்ட நீதிமன்றம் நேற்று மேற்படி உத்தரவை விடுத்துள்ளது.

நேற்றைய தினம் நீதிபதிகளாக எஸ்.துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் குழாம் முன்னிலையில் அந்த மனு மீதான பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது.

அதன்போது மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா விடயங்களை முன்வைத்தபோது மேற்படி மனு மீதான பரிசீலனையை அடுத்த 23ம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு உயர்நீதிமன்றம் கடந்த 10 திகதி வழங்கிய உத்தரவை சுட்டிக்காட்டினார்.

நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி நிலவும் தற்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது நாட்டு மக்களுக்கு எந்த நலனையும் வழங்கப்போவதில்லை எனத் தெரிவித்து இராணுவ கேர்னல் குறித்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

அதற்கிணங்கவே, அடுத்த 23ம் திகதிக்கு முன்னர் அந்த மனுமீதான விசாரணையை மேற்கொள்வதாக நீதிபதிகள் குழாம் தெரிவித்தது.

## தேர்தலை குறித்த...

என தேர்தல் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது. தேர்தல் ஆணைக்குழுவானது மனுவொன்றின் மூலம் அதற்கான காரணத்தை உச்ச நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது. உரியவகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக இதற்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்திற்கு உறுதியளித்திருந்தது. அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு முடியாமல் உள்ளதாகவும் அசௌகரியமான நிலைமை காரணமாக அதனை நிறைவேற்ற முடியவில்லை என்றும் தேர்தல் ஆணைக்குழு அதன்மூலம் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது. எவ்வாறாயினும் இம்மாதம் 22, 23 மற்றும் 24ம் திகதிகளில் தபால்மூல வாக்களிப்பை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்டிருந்த போதும் அதற்கான திகதி காலவரையின்றி ஒத்திப்போடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சென்ற பஸ் பாரிய....

பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்ததோடு, 21 பேர் படுங்காயமடைந்து ஐவர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக நோர்ட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

நோர்ட்டன் பிரிட்ஜ் கினிகத்தேனை பிரதான வீதியில் நோர்டன் பிரிட்ஜ் டெப்லோ பகுதியில் நேற்று முன்தினம் (19) இரவு 09.15 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

எதிர்திசையில் இருந்து வந்த மற்றுமொரு பஸ்ஸுக்கு வழிவிட முற்பட்ட போதே குறித்த பஸ் வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதாக நோர்ட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்த யாத்திரிகர்களை இராணுவப் படையினர், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

காயமடைந்த 26 பேர் ஆரம்ப சிகிச்சைக்காக வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அவர்களில் 05 பேர் ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கண்டி மற்றும் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. காயமடைந்தவர்களில் பஸ் சாரதியும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.விபத்தில் இரு இளம் பெண்கள் (19) இரவு உயிரிழந்ததுடன், பஸ்ஸில் பயணித்த ஒருவர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து, நேற்று 20ஆம் திகதி காலை இராணுவப் படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் சேர்ந்து விபத்துக்குள்ளான பஸ்ஸை சோதனை செய்தனர். இதன்போது காணாமல் போன இளைஞரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

பஸ்ஸுக்கு அடியில் உயிரிழந்த இளைஞனின் சடலம் வட்டவளை பிரதேச வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த இரு யுவதிகளும், ஒரு இளைஞனும் பண்டாரவளை, மஹரகம மற்றும் ஹிக்கடுவ, களுபே ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 26, 28 மற்றும் 33 வயதுடையவர்கள் எனவும், யாத்திரிகர்கள் குழு (18ஆம் திகதி) யாத்திரைக்கு வந்திருந்ததாகவும், தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் ஊழியர்கள் குழுவாகும் என நோர்ட்டன்பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்தில் பஸ் கடுமையாக சேதமடைந்துள்ளது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## தேர்தலுக்குப் பின்னர்...

பிரபஞ்சம் போன்ற வேலைத்திட்டங்கள் மூலம் மக்களுக்கு பெரும் சேவையை செய்துள்ளதாகவும், தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு தருணத்தில், தேர்தல் சட்டத்தை மதித்து பாடசாலைகளுக்கு பஸ் வழங்கும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், , தேர்தலின் பின்னர் மீண்டும் பாடசாலை பஸ் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மின்கட்டணத்தை 250 சதவீதத்தால் உயர்த்துதல், வரிக்கு மேல் வரி விதிப்பு, வங்கிக் கடனுக்கான வட்டி விகிதத்தை உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகளால் தொழில்முனைவோர் மட்டுமின்றி ஏனைய மக்களும் பெரிதும் அநாதரவான நிலையில் உள்ளதாகவும் இதனால் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் கூட அதிகரித்துள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

நாடு விழுந்து கிடக்கும் படுகுழியில் இருந்து வெளியேற பணம் ஒன்றே பதில் எனவும், அதை நாட்டுக்கு யாரால் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதை மக்கள் புத்திசாலித்தனமாக புரிந்து கொள்ள வேண்டும் எனவும், இல்லையேல் நாடு மீண்டும் பெரும் பாதாளத்தில் விழுவதை யாராலும் தடுக்க முடியாது போகும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## கரைதுறைப்பற்றை...

தீர்மானம், நல்ல எதிர்காலத்தை உருவாக்கும் என முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் – தமிழ் இனங்கள் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் கொள்கை வலுப்பெறும் என (19) இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் குறிப்பிட்டார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் நீதிமன்றை நாடியும் குறித்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட நிலையில், இதற்கான மாற்று வியூகம் ஒன்றை இலங்கை தமிழ் அரசுக் கட்சி அமைத்து அது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்படி, ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு எனும் கட்சியில் தராசு சின்னத்தில் போட்டியிட இலங்கை தமிழ் அரசுக் கட்சி முன்வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு கட்சியின் உறுப்பினர்கள் இராஜினாமா செய்து இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் மற்றும் ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆகியவற்றின் இணக்கப்பாட்டுடன் இந்த முடிவு எட்டப்பட்டு கரைதுறைப்பற்று பிரதேச சபையில் தராசு சின்னத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்கள் களமிறங்குவதாக முடிவு எட்டப்பட்டுள்ளது. குறித்த கட்சியில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக கொண்ட ஹிஜ்ராபுர வேட்பாளர் தவிர ஏனையவர்கள் அந்தக் கட்சியில் இருந்து விலகி தமிழரசு கட்சியிலே போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு அந்த சந்தர்ப்பத்தை வழங்கியதன் அடிப்படையில் ஐக்கிய தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுகின்ற நீராவிப்பட்டி வேட்பாளர் உடைய ஏற்பாட்டில் நீராவிப்பிட்டி பகுதியிலே இன்று தேர்தல் பரப்புரை கூட்டம் ஒன்றும், கட்சிகளுக்கிடையிலான ஒப்பந்தம் தொடர்பான விளக்கக் கூட்டமும் இடம்பெற்றது.

## தபால் திணைக்களத்தில்...

உள்ளக ரீதியில் நடத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மாணவர்களை குறிவைத்து ...

பாடசாலை மாணவர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு செல்லும் மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் கலந்த பாக்கு விற்பனை செய்யப்படுவதாக கோப்பாய் குற்றத்தடுப்பு பொலிசாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இந்நிலையில் குறித்த பகுதியை நோட்டமிட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவினர் போதைப் பொருள் கலந்த பாக்குடன் நபர் ஒருவரை கைது செய்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட நபரிடம் 750 கிராம் போதை கலந்த பாக்கு காணப்பட்டதுடன் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை கோப்பாய் பொலிசார் மேற்கொண்டனர்.

## மனித நுகர்வுக்கு...

உணவுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேலும் 27% சராசரி நிலையிலும் மற்றும் 55% மிகவும் சிறந்த நிலையிலும் உள்ளன. இலங்கையின் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் 2022 பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உணவு நுகர்வு வகைப்பாடு அமைப்பு படிவத்தின் கணக்கெடுப்பு தரவுகளின் படி இந்தத் தரவை வெளியிட்டுள்ளது.

தரவுகளின்படி, A பிரிவில் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களில் 55% மும், B பிரிவில் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் 27% மும், மற்றும் C பிரிவில் திருப்தியற்ற நிலையில் 18 சதவீதமான ஹோட்டல் மற்றும் உணவகங்களும் காணப்படுகின்றன. மனித நுகர்வுக்குத் தகுதியற்ற உணவை உற்பத்தி செய்யும் 18% ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களை அபிவிருத்தி செய்வதற்காக அவற்றை குறைந்தபட்சம் B வகைக்கு கொண்டு வருவதற்காக தேவையான அறிவுறுத்தல்கள், ஒழுங்குபடுத்தல்கள் போன்று தேவைப்படும்போது சட்ட நடவடிக்கை எடுப்பது போன்ற நடவடிக்கைகளிலும் சங்கம் ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

## ஐஸுடன் கைதான...

ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தெரியாமல் போதைப்பொருள் கேட்டு அழைப்புகளை விடுத்ததாகவும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவராலும் அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சந்தேக நபருக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து ஐஸ் போதைப்பொருளை கேட்டதாக கூறப்படும் நபர்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர். முதலாவதாக, 19 வயதுடைய இளைஞன் ஒருவரைக் கைதுசெய்து அவரிடம் நடத்திய விசாரணையில் தெரியவந்த தகவலின் அடிப்படையில் இந்த இருபத்து மூன்று வயதுடைய இளைஞரும் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, அவரிடமிருந்த கையடக்கத் தொலைபேசியும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வட, கிழக்கு...

கருத்துக்கள் ஊடாக எம்மிடம் எழுந்துள்ள இந்த கேள்விகளுக்கு இலங்கை அரசாங்கம் உடனடியாகப் பதிலளிக்க வேண்டும். அண்ணாமலை அண்மையில் இலங்கை வந்து தமிழகம் திரும்பிய பின்னர் சர்ச்சைக்குரிய இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இதன் பின்புலம் தொடர்பில் நாம் தீவிரமாக ஆராய வேண்டும். இந்தியாவில் உள்ள ஒரு தரப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயரை வைத்து அரசியல் நடத்த, அண்ணாமலை _ மோடியையும் வடக்கு கிழக்கையும் இணைத்துப் பேசி அரசியல் நடத்துகின்றார். அரசாங்கம் இவற்றையெல்லாம் கைகட்டி ஏன் வேடிக்கை பார்க்கின்றது. என்பதெல்லாம் மர்மமாகவே உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

## சரண குணவர்த்தன...

பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன்படி, சரண குணவர்தனவை 30,000 ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 5 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணையை மார்ச் 23ஆம் திகதி எடுத்துக் கொள்ளவும் கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று (20) உத்தரவிட்டது.

## தனியார் சொத்துக்களை...

வெளியிடப்பட்ட ஜே.வி.பியின் கொள்கை அறிக்கையின் ஒரு பகுதியை மேற்கோள்காட்டி சஜித் பிரேமதாச உள்ளிட்டவர்கள் இந்த விடயத்தை வெளியிட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்து வந்த காலப்பகுதிகளில் ஜே.வி.பி காலப்போக்குக்கு ஏற்ப தமது கொள்கைகளை மாற்றியுள்ளது. எனவே சஜித் பிரேமதாச தமது தகவல்களை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

சஜித் பிரேமதாச உட்பட்டவர்கள் சுட்டிக்காட்டுகின்ற ஜே.வி.பியின் கொள்கை, 1979ஆம் ஆண்டு தமது மாநாட்டில் கொள்கை அறிக்கையாக அங்கீகரிக்கப்பட்டு 1980ஆம் ஆண்டு சோசலிச முகாம் மிகவும் வலுவாக இருந்தபோது வெளியிடப்பட்டது. எனினும் 43 வருட இடைவெளியில், வலுவான சோசலிச முகாம் சரிந்தது. புதிய அரசியல் முகாம்கள் அமெரிக்கா, ஐரோப்பா, சீனா, ரஷ்யா போன்றவற்றின் அடிப்படையில் உருவாகின.

மக்களின் அபிலாஷைகள், தொழிநுட்பம், சந்தை, தகவல் தொடர்பு முன்னெப்போதும் இல்லாத வகையில் மாறிவிட்டது.

இந்நிலையில், உலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்ப 2000, 2015 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி பல புதிய செயற்திட்டங்களை வெளியிட்டுள்ளது என சுட்டிக் காட்டியுள்ளார்.

## யாழ் ராணி புகையிரதத்துடன்...

புகையிரத்தில் மோதுண்ட பஸ், அருகில் தரித்து நின்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி பொறியியல் பீட பீடாதிபதியின் கார் மீது மோதியதில் காரின் முன் பக்கம் சேதமடைந்தது. அறிவியல் நகர்ப் பகுதியில் விபத்துக்குள்ளான யாழ்.ராணி புகையிரதம், வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது, ஓமந்தை புகையிரத கடவையில் காரொன்றையும் மோதித்தள்ளியது. திருத்த வேலை காரணமாக வடக்கு மார்க்க புகையிரத சேவை தடைப்பட்டுள்ளமையால், யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை மாத்திரம் உள்ளூர் சேவையாக யாழ்ராணி புகையிரத சேவை இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வரலாற்றுச் சிறப்புமிக்க...

அறிஞர்கள் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

இக்குழு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூடி, திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். நேற்று முன்தினம் இரவு (19) வீதி உலா வந்த “குடியரசு பெரஹரா” நிறைவடைந்ததை அடுத்து நேற்று (20) காலை கண்டி ஜனாதிபதி மாளிகையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

## மின்சார சபை,....

வரும் நிலையில் உத்தேச மறுசீரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அரசாங்கம் அந்த நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளது. மேற்படி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை இதற்கு முன்னரே மேற்கொள்ளுமாறு அந்த நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டபோதும், அறவீட்டு முறைமை தயாரிப்பு நடவடிக்கைகள் பாதமதடைந்ததன் காரணமாகவே மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தாமதமாகியதாக தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஊடாக மின்சார சபையும், பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் பல தொகுதிகளாக பிரிக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதன்மூலம் தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## O4 கட்டளை...

நிலையில், மேற்படி 4 கட்டளைச் சட்டங்களும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதுடன் பாராளுமன்ற அமர்வுகள் இன்று முதல் 24ம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் என்றும் பாராளுமன்றத்தின் பிரதி பொதுச் செயலாளர் குஷானி ரோகனதீர தெரிவித்துள்ளார்.

இன்றைய தினத்திற்கான விவாதம் நிறைவுபெறும் நிலையில் சபை ஒத்திவைப்புவேளை பிரேரனை மீதான விவாதம் மாலை 5 மணிக்கு இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இன்றைய தினம் இலங்கை தேயிலைச் சபையின் கீழ் இல. 2245/29, 2248/36, 2248/37 மற்றும் 2258/14 ஆகிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டம் 4 மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் 2303/07 இலக்கம் கொண்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைச் சட்டமே பாராளுமன்றத்தில் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

அதேவேளை நாளை 22ம் திகதி கொழும்பு துறைமுக நகர பொருளாராத ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வரும் இரு கட்டளைச் சட்டங்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.



# திருநீற்றுப் புதனோடு நாளை ஆரம்பமாகும் தவக்காலம்



இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகளை தியானிக்கும் தவக்காலம் நாளை புதன்கிழமை திருநீற்றுப்புதனுடன் ஆரம்பமாகின்றது.

கத்தோலிக்க மக்களால் அனுஷ்டிக்கப்படும் 40 நாள் தவக்காலத்திற்கான ஆரம்ப தினமான நாளைய தினத்தில் உலகின் அனைத்து கத்தோலிக்க ஆலயங்களிலும் விசேட திருப்பலிப் பூசைகள் ஒப்புக்கொடுக்கப்பட்டு விசுவாசிகளின் நெற்றியில் அருட்பணியாளர்களால் திருநீறு அணிவிக்கப்படும்.

"மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய். மண்ணுக்கே திரும்புவாய் மறவாதே" என்று அருட்பணியாளர்கள் கூறி நெற்றியில் திருநீற்றை அணிவிப்பார்கள்.

திருச்சபையானது நமது தவறுகளை உணர்ந்து நாம் மனமாற்றம் அடைவதற்கான காலமாக தவக்காலத்தை ஒவ்வொரு வருடத்திலும் நமக்கு அருட்கொடையாக வழங்குகின்றது.

அந்த வகையில் 40 நாட்களுடன் கூடிய தவக்காலம் இறைவன் நமக்குத் தரும் அருளின் காலமாகவும் திகழ்கிறது.

கத்தோலிக்கத் திருச்சபையின் முக்கிய தினங்களாக கிறிஸ்மஸ், புனித வெள்ளி, ஈஸ்டர் ஞயிறு, குருத்தோலை ஞாயிறு விபூதிப் புதன் போன்ற தினங்களை குறிப்பிட முடியும்.

அந்த வகையில் நம் ஆண்டவர் உயிர்த்தெழுந்த ஈஸ்டர் ஞாயிறு பண்டிகைக்கு 40 நாட்களுக்கு முன்பதாக வரும் திருநீற்றுப் புதனோடு தவக்காலம் ஆரம்பிக்கின்றது.



இயேசு கிறிஸ்துவின் பாடுகளை தியானிக்கும் காலமாக தவக்காலம் குறிப்பிடப்பட்டாலும் கிறிஸ்தவ வரலாற்றில் அதற்கு முன்னரே பல்வேறு விதமாக தவக்காலம் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது.

பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் யோபு, தானியேல், எஸ்தர், போன்ற ஆகமங்களில் 40 நாட்கள் தவக்காலம் தொடர்பான தகவல்களை காண முடிகின்றது. அதன்படி இது கிறிஸ்துநாதர் சிலுவையில் பாடுபட்டு மரித்ததற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. இது பழைய ஏற்பாட்டிலிருந்து வந்த வரலாறு.



அவ்வாறு பார்க்கும் போது தற்போது நாம் அனுஷ்டிக்கும் விபூதிப்புதன் கி.பி 900 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாக தகவல்கள் உள்ளன.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து எதிர்கொண்ட திருப்பாடுகளுக்கு முன்பதாக ஒரு ஞாயிறு தினத்தில் அவர் எருசலேமிற்குள் பிரவேசித்த போது அன்றைய மக்கள் ஒலிவ மரக் கிளைகளை உயர்த்தியும் அசைத்தும் ஓசன்னா பாடி அவரை வரவேற்றார்கள்.

அந்த தினத்தையே நாம் குருத்தோலை ஞாயிறு என தற்போது அனுஷ்டிக்கின்றோம்.

அந்த தினத்தை அனுஷ்டிக்கும் மக்கள் அன்றைய தினம் ஆலயங்களில் குருத்தோலைகளை கையில் ஏந்தி குருவானவருடன் பவனியாக சென்று திருப்பலியில் பங்கேற்கின்றனர். அன்றைய தினத்தில் ஆசீர்வதிக்கப்படும் அந்த குருத்தோலைகள் விசுவாசிகளால் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அதில் சிலுவை அடையாளம் தயாரிக்கப்பட்டு வீடுகளில் அதை அந்த வருடம் முழுவதும் பாதுகாத்து வைப்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகும்.

அந்த குருத்தோலையே அடுத்து வரும் ஆண்டில் ஆலயங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அவை எரித்து சாம்பலா க்கப்பட்டு விபூதியாக திருநீற்றுப் புதனில் அருட்பணியாளர்களால் நெற்றியில் அணிவிக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அன்று வாழ்ந்த மக்கள் தமது பாவங்களை நினைத்து மனம் வருந்தி உடல் முழுவதும் சாம்பலை பூசிக்கொண்டும் கோணியை ஆடையாக உடுத்திக் கொண்டும் ஏழ்மைக் கோலம் தரித்தும் தலைக்கு எண்ணெய் கூட தேய்க்காமல் நோன்பிருந்து தவக்காலத்தை அனுஷ்டித்துள்ளார்கள். அன்றுள்ள மன்னர்களும் அதனை பின்பற்றியுள்ளமை குறிப்பிடப்பட வேண்டியது.

அதன் நீட்சியாகவே இப்போதும் திருநீற்றுப் புதனன்று நெற்றியில் சாம்பலினால் விபூதி அணிவிக்கப்படுகின்றது.



நெற்றி என்பது மனிதனுடைய முழுமையைக் குறிப்பதாக பரிசுத்த வேதாகமம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. அந்த வகையில் நெற்றியில் பூசப்படும் விபூதியானது மனிதனை முழுமையாக இறைவனில் சரணடையச் செய்கிறது எனலாம். நெற்றி தொடர்பான பரிசுத்த வேதாகமத்தின் பார்வையை நாம் திருவெளிப்பாட்டில் பார்க்க முடியும்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து 40 நாட்கள் இரவும் பகலும் நோன்பிருந்து பாலைவனத்தில் துயரங்களை அனுபவித்த நிகழ்ச்சியை நாம் பரிசுத்த வேதாகமத்தில் பார்க்கின்றோம்.

இப்போதும் தவக்காலமானது நமது பெலவீனங்களையும் பாவங்களையும் தவறுகளையும் நாம் இனங்கண்டு அதற்காக மனஸ்தாபப்படும் காலமாகவும் இறைவனின் ஆசீர்வாதத்தினால் அதிலி ருந்து மீண்டு மனந்திரும்பும் காலமாகவும் அமைகிறது.

இக்காலங்களில் ஆடம்பர வாழ்க்கையை ஒறுத்து, சுத்தபோசனம் மற்றும் நோன்பு அனுசரித்து, எளிமையாக வாழ்ந்து அதன் மூலம் மீதப்படும் பணத்தை ஏழைகளுக்கு செலவிடுவது, இல்லாதோருக்கு உதவுதல் அன்னதானம் வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்வதும் இடம்பெற்று வருகிறது.

தம்மைத் தாழ்த்தி நோன்பிருந்து இறைவனை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையே தவக்காலம் நமக்கு கற்பிக்கின்றது.

அந்த வகையில் நம் ஆண்டவர் இயேசு தெரிவிப்பது போன்று நாம் நோன்பிருப்பது பிறருக்கு தெரியாதவாறும் பெருமைக்காகவும் புகழுக்காகவும் வெறுமனே சடங்கிற்காகவும் நோன்பு நோற்காமல் மனதால், எண்ணங்களால், செயல்களால் இறைவனை சரணடையும் மனநிலையுடன் அதனை மேற்கொள்ள வேண்டும் என்பதே இறை விருப்பமாகும்.

இம்முறை திருநீற்றுப் புதனுடன் ஆரம்பமாகும் தவக்காலம் ஏப்ரல் 7ஆம் திகதி புனித வெள்ளியுடன் நிறைவு பெறுகின்றது. இக்காலங்களில் எமது அனுஷ்டானங்கள் அனைத்தும் எந்தவித தடங்கலும் இல்லாமல் இடம் பெறுவதற்கு இறையாசீரை வேண்டுவோம்.

**லோரன்ஸ் செல்வநாயகம்...**











உலக மெதடிஸ்ட் திருச்சபையின் அதிஉயர் சமாதான விருது இலங்கை மெதடிஸ்ட் திருச்சபையின் தலைவர் வண. பிதா வில்லியம் பிரேம்குமார் ஜெபனேசர் அடிகளாருக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த திருச்சபையின் பொதுச் செயலாளர் வண. பிதா ஐவன் ஏபிரஹாம் அவர்களினால் இந்த விருது கடந்த சில தினங்களுக்கு முன் கொழும்பு உவெஸ்லி கல்லூரி கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கத்தோலிக்க திருச்சபையின் ஆயர்கள், இந்து, பௌத்த சமய மதத்தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.
(பட உதவி: மத்தியூ ஜேசுதாசன்)

# "தவக்காலம் அருளின் காலமாகட்டும்"

## தவக்காலச் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ்



தவக்காலம் இயேசுவின் குரலுக்கு செவி சாய்க்கும் காலமாக அருளின் காலமாக இருக்க வேண்டும்.என்றும் எல்லாவற்றிற்கும் மேலாக நம் உடன் வாழும் மனிதர்களில் வாழும் கடவுளின் குரலுக்கு செவி மடுக்கவேண்டும் என்றும் திருத்தந்தை. குறிப்பிட்டுள்ளார் தவக்காலத்தையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தவக்காலச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளார்..

இயேசுவின் உருமாற்ற நிகழ்வை சினோடல் என்னும் ஒருங்கிணைந்த பயணத்துடன் ஒப்பிட்டு தனது தவக்கால செய்தியை திருத்தந்தை பிரான்சிஸ். வெளியிட்டுள்ளார்

ஒவ்வொரு ஆண்டும் தவக்காலத்தின் இரண்டாவது ஞாயிறன்று உருமாற்றத்தின் நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது. இத் தவக்காலத்தில் இயேசு நம்மைத் தனியாகத் தன்னுடன் அழைத்துச் செல்கின்றார் நமது அன்றாட, வழக்கமான, சலிப்பூட்டும் வாழ்க்கைக்கு மத்தியில் தவக்காலத்தில் நாம் இயேசுவோடு சேர்ந்து "உயர்ந்த மலையில் ஏறி கடவுளின் புனித மக்களுடன் வாழ அழைக்கப்படுகிறோம் என்றும் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.



தவக்காலமானது துறவு, பயணம் என்னும் இரண்டால் இணைந்திருப்பது போல ஒருங்கிணைந்த பயணமும் தனிப்பட்ட மற்றும் திருஅவை மாற்றத்தை தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்றும்,. தாபோர் மலையில் திருத்தூதர்கள் முன் நடைபெற்ற இயேசுவின் உருமாற்றம் இரண்டு முக்கிய செய்திகளை எடுத்துரைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்று வானத்திலிருந்து கேட்ட அவர் சொல்வதைக் கேளுங்கள் என்ற வார்த்தையும் மற்றொன்று, உருமாற்ற ஒளியினால் நிரப்பப்பட்ட திருத்தூதர்கள், கண்களை ஏறெடுத்து இயேசுவைத்தவிர வேறொருவரையும் பார்க்கவில்லை என்ற வார்த்தையுமாகும்.

தவக்காலம் இயேசுவின் குரலுக்கு செவி சாய்க்கும் காலமாக அருளின் காலமாக இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நம் உடன் வாழும் மனிதர்களில் வாழும் கடவுளின் குரலுக்கு செவிமடுக்கவேண்டும், என்றும் திருத்தந்தை. குறிப்பிட்டுள்ளார்.

வானத்திலிருந்து வந்த குரலைக் கேட்ட சீடர்கள் முகம் குப்புற விழ, இயேசு அவர்களை எழுந்திருங்கள் அஞ்சாதீர்கள் என்று கூறுகின்றார் அவர்கள் நிமிர்ந்து பாரத்தபோது இயேசுவைத்தவிர வேறொருவரையும் அங்கு காணவில்லை என்ற இறைவார்த்தைகளுக்கேற்ப அன்றாட உழைப்பு, துன்பம், முரண்பாடு, பயம், அசாதாரண நிகழ்வுகள், அனுபவங்கள் ஆகியவற்றில் நாம் தஞ்சமடையாது இயேசுவை மட்டுமே காணவும் பாஸ்கா ஒளியின் மகிமையை எதிர்கொள்ளவும் தவக்காலம் நம்மை அழைக்கின்றது என்றும் திருத்தந்தை.மேலும் தெரிவித்துள்ளார்.

**மெரினா ராஜ்**

ஜோசப் வாஸ் மன்ற ஏற்பாட்டில்

# திறந்தவெளி பெரிய சிலுவைப் பாதை

**26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை**



கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றம் வருடந்தோறும் நடத்தும் தவக்கால திறந்தவெளி பெரிய சிலுவைப் பாதை எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு கொழும்பு புதுச்செட்டித் தெரு புனித வியாகுல மாதா ஆலய முன்றலிலிருந்து பெரிய சிலுவைப்பாதை பவனி ஆரம்பமாக வுள்ளது.

அதனைத் தொடர்ந்து சிலுவைப் பாதை பவனி கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், செக்கடித்தெரு அன்னை வேளாங் கண்ணி ஆலயத்தின் ஊடாக கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தை வந்தடைய வுள்ளது.

சிலுவைப் பாதை தியான அருளுரைகளை அருட்தந்தையர்கள் நிகழ்த்துவார்கள்.

கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு என்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும் இந்த திறந்தவெளி பெரிய சிலுவைப் பாதையின் இறுதியில்

சிறப்பு திருப்பலிப் பூசை ஒப்புக் கொடுக்கப் படும்.

ஆயருடன் அருட்தந்தையர்கள் பலரும் இணைந்து இந்த திருப்பலியை ஒப்புக் கொடுக்கவுள்ளனர்.

தினகரன் THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321
சுபகிருது வருடம் மாசி மாதம் 09ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரஜப் பிறை 29

## குறள் தரும் சிந்தனை



காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு

அறிவற்றவனுக்கு அறிவு காட்ட முயல்பவன்
அறிவற்றவனால் அறிவற்றவனாய் எண்ணப்படுவான்;
அறிவற்றவன், தான் அறிந்ததே அறிவாக எண்ணுவான்.

# பொருளாதார மீட்சிக்கே இன்று முன்னுரிமை வழங்க வேண்டும்

நாடு பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி மீண்டெழுந்து வந்து கொண்டிருக்கும் சூழலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான காலமும் வந்துள்ளது. அதற்கேற்ப தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

ஜனநாயகப் பாரம்பரியங்களுக்கு அமைய எந்தவொரு தேர்தலும் உரிய நேரகாலத்தில் நடத்தப்பட வேண்டுமென்பதில் அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. ஆனால் கடந்த வருடம் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியானது, சுதந்திர இலங்கை முன்னொருபோதும் கண்டிராத ஒன்று. அந்நெருக்கடியின் தாக்கமும் அழுத்தங்களும் நாட்டை விட்டு இன்னும் முழுமையாக நீங்கி விடவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளித்துள்ளார். அதனை அடிப்படையாகக் கொண்டு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளார். அதன் பயனாக பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக நாடு மீண்டெழுந்து வருகிறது.

இருந்த போதிலும், பெருந்தொகை நிதிச்செலவுக்குரிய தேர்தலொன்றை நடத்துவதற்குத் தேவையான பொருளாதார வசதியை நாடு இன்னும் அடைந்து கொள்ளவில்லை. இதனை இந்நாட்டு பொருளாதார நிபுணர்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேநேரம், இத்தேர்தலை நடத்துவதற்கு ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்கித் தருமாறு தேர்தல்கள் ஆணைக்குழு நிதியமைச்சிடம் கேட்டிருந்தது. அதற்கு நிதியமைச்சின் செயலாளர், 'நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு நிதி வழங்குவது கடினம்' என்று தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இவை இவ்வாறிருக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'நான் ஜனநாயகத்தை உச்ச அளவில் மதிக்கும் தலைவன். ஜனநாயகத்திற்கு முதலில் நாட்டில் பொது அமைதி தேவை. அதற்கு சட்டம் ஒழுங்கு பேணப்பட வேண்டும். சட்டம் ஒழுங்கு இன்றி எந்தவொரு நாட்டிலும் ஜனநாயகம் இருக்க முடியாது. அதனால் பொருளாதாரத்தை முன்னுரிமை அடிப்படையில் மீட்டெடுத்ததும் அடுத்த வருடம் மக்கள் தம் வாக்குக்களைப் பயன்படுத்தி நாட்டில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தலாம்' என்றுள்ளார்.

நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கம் முற்றாக நீங்கிவிடாத சூழலில், பொறுப்புமிக்க அரசியல் தலைவர் ஒருவரின் வார்த்தை எவ்வாறு இருக்குமோ அதனையே ஜனாதிபதியின் இவ்வார்த்தைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

தற்போதைய சூழலில் தேர்தலை விடவும் மக்களை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இப்பொருளாதார நெருக்கடி மக்களுக்கு பலவித அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது. அவற்றில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். அந்தடிப்படையிலேயே ஜனாதிபதி நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறார்.

இருந்த போதிலும், எதிரணியிலுள்ள சில கட்சிகள் மக்களின் பொருளாதார நலன்களை கருத்தில் கொள்ளாது உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தது. இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக கொழும்பின் பல வீதிகளிலும் வாகன நெரிசல்கள் ஏற்பட்டதோடு பயணிகள் அசௌகரியங்களுக்கும் முகம்கொடுத்தனர். அவர்கள் மணித்தியாலக்கணக்கில் வீதிகளில் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகினர்.

இந்நாட்டில் வழமையாக திங்கட்கிழமை பொதுநிறுவனங்களின் முதலாவது நாளாக விளங்குவதால் அந்நாளில் பல்வேறு தேவைகளின் நிமித்தம் நாடெங்கிலும் இருந்தும் மக்கள் கொழும்புக்கு வருவது வழமை. அந்த வகையில் நேற்றும் மக்கள் கொழும்புக்கு வருகை தந்திருந்தனர்.

ஆனால் இவர்கள் முன்னெடுத்த வீதிமறியல் ஆர்ப்பாட்டத்தினால் பயணிகள் உரிய நேரத்தில் சேவையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இடத்திற்கு செல்ல முடியாத நிலைக்கும் தூர இடங்களில் இருந்து வந்த மக்கள் வீடுகளுக்கு திரும்புவதிலும் தாமதங்களுக்கு முகம்கொடுத்தனர்.

இவை இவ்வாறிருக்க, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலவரக்காரர்கள் போன்று செயற்பட்டதால் பொலிஸ் பாதுகாப்பு மேலதிகமாகத் தேவைப்பட்டது. அரசாங்க அச்சகத் திணைக்களம் உள்ளிட்ட பல பொது இடங்களினதும் பாதுகாப்பின் நிமித்தம் விஷேட படையினரும் அழைக்கப்பட்டனர்.

ஆனால் இந்த உள்ளூராட்சித் தேர்தலோ நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதும் அல்ல, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கக் கூடியதுமல்ல. இதனை மக்கள் நன்கறிவர். ஆனாலும் தேர்தலை நடத்துமாறு மக்கள் கோருவதாகக் காட்சிப்படுத்தி அற்ப அரசியல் இலாபம் தேடும் முயற்சியே இது. இதனையும் மக்கள் அறியாதவர்கள் அல்லர்.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டிய காலம் இதுவாகும். அதைவிடுத்து அற்ப அரசியல் இலாபம் தேடும் சூழல் அல்ல. இச்சந்தர்ப்பத்தில் பொறுப்புடனும் கடமையுடனர்வுடனும் செயற்படும் பட்சத்தில் நாடும் மக்களும் மீண்டும் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுவதை தவிர்க்க முடியாது. இதனைப் புரிந்து கொண்டு செயற்படுவது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மனிதனை அறிஞனாக உருவாக்க அடித்தளம் அமைப்பது தாய்மொழி

## சர்வதேச தாய்மொழி தினம் இன்று அனுஷ்டிப்பு

மனித ஆற்றலை மேம்படுத்தவும் ஒருவரது படைப்பாற்றலை அதிகப்படுத்தவும் தாய்மொழிக் கல்வியால் மட்டுமே முடியும் என்பது அறிவியல் ஆய்ந்த உண்மையாகும். மனிதனது சிந்தனைத் திறனுக்கும் தாய்மொழிக்கும் தொடர்புண்டு. தாய்மொழியிலேயே ஒருவர் அதிகம் சிந்திக்க முடியும்.

தாய்மொழியில் அறிவியல் கல்வியைக் கொடுப்பதன் மூலம் ஆக்கபூர்வமான சிந்தனையை குழந்தைகள் மத்தியில் உருவாக்க முடியும் என்று இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் குறிப்பிட்டுள்ளார். தாய்மொழியின் சிறப்புக் குறித்து முன்வைக்கப்பட்ட இக்கருத்துகள் தாய்மொழியின் அவசியத்தை நோக்கி உலகைச் சிந்திக்கவும் திசைதிருப்பவும் வைத்துள்ளன.

ஐ.நாவின் யுனெஸ்கோ நிறுவனம் பெப்ரவரி 21 ஆம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாகப் பிரகடனம் செய்துள்ளது. பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் 1952 இல் மொழிப் பாதுகாப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது. அப்போராட்டத்தில் நான்கு பல்கலைக்கழக மாணவர்கள் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் பெப்ரவரி 21 இல் நடந்தது. மொழிக்காக முதன் முதலில் உயிர்நீர்த்த இத்தினத்தை சர்வதேச தாய்மொழி தினமாக ஆக்க வேண்டுமென வங்கதேச அறிஞர் ராஃபிக்குல் இஸ்லாம் ஐ.நா வுக்கு கோரிக்கை விடுத்திருந்தார். அக்கோரிக்கைக்கு யுனெஸ்கோ நிறுவனம் 2000 ஆம் ஆண்டு கொடுத்த அங்கீகாரமே சர்வதேச தாய்மொழி தினமாகும்.

தாய்மொழியில் கல்வி பயிலும் குழந்தைகளே ஆழமாகக் கற்கின்றனர். கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமாயின் தாய்மொழிக்கல்வியை ஆதரிக்க வேண்டும் போன்ற விடயங்கள் அடங்கிய கோவையொன்றை வெளியீடு செய்து யுனெஸ்கோ தாய்மொழி தினத்தை பிரகடனம் செய்தது

தாய்மொழியை மறந்து அதன் சிறப்பைப் பேணாத நிலையில் உலகில் இருந்த ஆறாயிரத்துக்கும் அதிகமான மொழிகளில் 50 வீதமானவை வழக்கொழிந்து வருவதாக ஆய்வொன்று குறிப்பிடுகிறது. தாய்மொழியைப் பேணிவருபவர்களில் தமிழ்மொழி பற்றாளர்களே அதிகம் எனக் கூறப்படுகிறது. உலகிலுள்ள மொழிகளில் நீண்ட பாரம்பரியமும் கலைப் பண்பும் உள்ள மொழியாக தமிழ் திகழ்கின்றது. செம்மொழிக்கான அந்தஸ்து தமிழ்மொழிக்கு உள்ளது.




இன்று நமது நாட்டில் பிற மொழிக் கற்கையின் வீச்சு அதிகரித்து வருகிறது. பிறமொழிக் கற்கை தேவையான போதிலும், தாய்மொழிக் கல்வி அவசியமானது. தாய்மொழியானது குழந்தைப் பருவத்திலிருந்தே ஊட்டப்பட வேண்டும் என்ற கருத்து நிலைத்தோங்குகிறது. 'குழந்தைகள் மனதளவில் எவ்விதத் தொல்லையும் இல்லாமல் ஒரு மிதிவண்டியைப் பழகுவது போல் தாய்மொழியை எளிமையாகக் கற்றுக் கொள்கிறார்கள்' என்று சாம்கி என்ற மேலைத்தேய மொழியியலாளர் கூறியுள்ளார். தாய்மொழியில் கற்றவர்களே கண்டுபிடிப்பாளர்களாகவும் ஆய்வாளர்களாகவும் பரிணமிக்கின்றனர் என்பது மொழி ஆய்வின் முடிவாகும். தாய்மொழியானது கண், இதர மொழிகள் கண்ணாடி என்ற கருத்தும் தாய்மொழி தொடர்பில் முன்வைக்கப்படுகிறது. கண்ணாடியை மாற்றலாம், வேண்டிய விதங்களில் பெறலாம், ஆனால் கண்ணை மாற்றி அவ்வாறான இன்பங்களைப் பெற்றுக் கொள்ளமுடியாது.

இதனால்தான் தாய் மொழியின் மாறாத தன்மை முக்கியம் எனக் கூறப்படுகிறது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மறைமலையடிகள் ஆரம்பித்த தனித்தமிழ் இயக்கம் வரலாற்றுக் காலங்கள் முதலே தமிழ் இலக்கியத்திற்கென புலவர்களும் மன்னர்களும் ஆற்றிய பங்களிப்புக்கள் எல்லாமே தாய்மொழியின் முக்கியத்துவத்தை உணர வைக்கின்றன.

'தமிழுக்கு அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று பாடிச் சென்ற பாரதிதாசனின் வரிகள் நம் உள்ளங்களை உசுப்பும் போது தமிழின் உணர்வும் மேன்மையும் பீறிட்டு ஓடும்.

ஐரீஸ் நாட்டறிஞர் வோலரா குறிப்பிடும் போது 'ஒரு இனத்தை அழிக்க வேண்டுமாயின் அதற்குப் பெரும் படை பலம் தேவையில்லை. அந்நாட்டின் தாய்மொழியை சிதைக்கத் தொடங்கினால் போதும்' என்கின்றார்.

பொருளாதாரத்தாலும் அரசியலாலும் மற்றும் இதர அம்சங்களாலும் ஒன்றிணைக்க முடியாததை தாய்மொழி செய்கிறது. எப்பிரதேசங்களில் எல்லாம் ஒருமைப்பாடுடன் ஒரு மொழியைப் பேசுகின்றோமோ, அவர்கள் எல்லோரும் அம்மொழியின் குழந்தைகள். அக்குழந்தைகளுக்கிடையே இருக்கும் அன்பு, பரஸ்பரம், இனிமை என்பன பரிமாறப்பட வேண்டும். அவ்வகையில் தமிழ்த் தாயின் பிள்ளைகள் இன்று உலகின் மூலை முடுக்கெல்லாம் பரந்து வாழ்கின்றனர். அவர்கள் எல்லோரும் ஒரு தாயின் மக்கள் என்பதால் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் தமிழர்களே என்பதுதான் உண்மை. அவர்களை எவ்வித கோட்பாடுகளும் கொள்கைகளும் பிரித்து விட முடியாது.

நமது தாயாகிய தமிழைப் பாதுகாத்து அதன் இயல்புகளுடன் எதிர்கால சந்ததியினருக்கும் பரிமாற்றம் செய்ய வேண்டியது ஒவ்வொரு தமிழனினதும் கடமையாகும்.

ஜெஸ்மி எம்.மூஸா...
முதுகலை தத்துவமாணி_தமிழ்
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# பேருவளை மாளிகாச்சேனையில் இன்று புஹாரி தமாம் மஜ்லிஸ்

பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் முஸ்தபவிய்யா புஹாரித் தக்கியாவில் 144 ஆவது புஹாரி தமாம் மஜ்லிஸ் இன்று 21.02.2023 ஆம் திகதி காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய அஷ்செய்கு அஹம்மத் பின் முஹம்மத் ஆலிம் தலைமையில் நடைபெறுகிறது.

இறுதித்தூதர் நபி (ஸல்) அவர்களின் வாய் வந்த இலட்சக்கணக்கான ஹதீஸ்களைத் தொகுத்து, 7275 ஹதீஸ்களை மட்டுமே இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் தமது ஸஹீஹூல் புகாரி கிரந்தத்தில் எழுதியுள்ளார். மாளிகாச்சேனையில் அமைந்துள்ள பைதுல் முபாரக் முஸ்தபவீயா புஹாரி தக்கியாவில் இற்றைக்கு 144 வருடங்களுக்கு புகாரி மஜ்லிஸ் ஆரம்பிக்கப்பட்டது.

பேருவளை நகரில் ஆதம் மரைக்காரின் புதல்வரான சங்கைக்குரிய மாகாண் சேகு முஸ்தபா வலியுல்லாஹ் பிறந்தார். அன்னார் இஸ்லாமிய சட்ட திட்டங்கள் அரபு இலக்கண, இலக்கிய, பிக்ஹூ சட்ட திட்டங்கள் போன்ற இஸ்லாமிய மத அறிவியல் துறையில் பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தார். இந்தியாவில் உள்ள காயல் பட்டணத்தில் இத்துறையில் அறிவு பெற்று நாடு திரும்பி பேருவளை மாளிகாசேனை பைத்துல் முபாரக் முஸ்தபவியா புகாரித் தக்கியாவை தனது தலைமை ஸ்தானமாக அமைத்து இஸ்லாமிய பணிபுரிந்தார். சேகு முஸ்தபா அவர்கள் மெய்ஞானியாகவும் புலவராகவும் திகழ்ந்தார். அவரால் இயற்றப்பட்ட மீசான் மாலை அரபுத்தமிழ் கவிதை புகழ் பெற்றதாகவுள்ளது. அவர் பல இஸ்லாமிய பத்வா நூல்கள், இஸ்லாமிய சட்ட திட்டங்கள், முனாஜாத்துக்கள் போன்றவற்றை அரபியிலும், அரபுத்தமிழிலும் வெளியிட்டார். அஹ்காமுல் இகம் என்ற பெயரில் அரபுத் தமிழ் அச்சுக்கூடத்தை நிறுவி அதன் மூலம் அபுத் தமிழில் பல ஆக்கங்களை வெளியிட்டார். இறுதியில் ஹஜ் கடமைக்காக புனித மக்கா சென்ற போது மக்காவில் காலமானார்.



புனித புகாரி மஜ்லிஸை ஹிஜ்ரி 1301 முதல் 1304 வரை சங்கைக்குரிய சேகு நாயகம் சேகு முஸ்தபா (றஹ்) நடத்தினார். பின்னர் அவர் மைந்தர் சங்கைக்குரிய சேகு நாயகம் முஹம்மத் ஹாஜியார் ஆலிம் ஹிஜ்ரி 1304 முதல் 1331 வரை நடத்தினார். அவருக்குப் பின்னர் அவரது மைந்தர் சங்கைக்குரிய சேகு நாயகம் அப்துல் சமீம் ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1331 முதல் 1391 வரை தலைமை தாங்கி நடத்தினார். அதனைத் தொடர்ந்து அவரது மைந்தர் சங்கைக்குரிய சேகு முஹம்மத் நூர் ஆலிம் அவர்கள் ஹிஜ்ரி 1391 முதல் 1411 வரை நடத்தினார். அன்னார் காலமான பின்னார் அவரது மைந்தர் சங்கைக்குரிய சேகு அஹமது ஆலிம் ஹிஜ்ரி 1412 முதல் இன்றுவரை நடத்தி வருகிறார். சங்கைக்குரிய சேகு முஸ்தபா நாயகத்தின் குடும்பத்தைச் சேர்ந்த பரம்பரையினர் புனித புகாரி மஜ்லிஸை புஹாரித் தக்கியாவில் நடத்தி வருகின்றனர்.

பீ.எம்.முக்தார்...
(பேருவளை விஷேட நிருபர்)

# காஷ்மீரில் அமைதி, சமாதானம் சீர்குலைய இடமளிக்கலாகாது!




## 'காஷ்மீர் தினம்' அனுஷ்டிப்பதன் மூலம் இந்தியாவுக்கு எதிரான கருத்துகள் பரப்பப்படுவதாக சர்வதேச அவதானிகள் அபிப்பிராயம்

பாகிஸ்தான் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 5 ஆம் திகதியன்று 'காஷ்மீர் தினம்' என்பதன் பேரில் தினமொன்றை அனுஷ்டித்து வருகின்றது. இம்மாதம் 5 ஆம் திகதியும் காஷ்மீர் தினத்தை பாகிஸ்தான் அனுஷ்டித்தது.

பாகிஸ்தான் தனது இராஜதந்திர கட்டமைப்புகள் செயற்படுகின்ற அனைத்து நாடுகளிலும் உள்ள தூதரகங்களில் இது தொடர்பான வைபவங்களை நடத்தி வருகின்றது. காஷ்மீர் மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பதென்ற போர்வையில் பாகிஸ்தான் இந்தத் தினத்தை அனுஷ்டித்து வருகின்ற போதிலும், இது தொடர்பான நிகழ்வுகளில் இந்தியாவுக்கான எதிர்ப்புக் கருத்துகளே முன்னிலைப்படுத்தப்படுவது நன்றாகவே தெரிகின்றது.

காஷ்மீர் பிரதேசத்தை பாகிஸ்தான் வசமாக்குவதே'காஷ்மீர் தினம்' அனுஷ்டிக்கப்படுவதன் நோக்கமென்று இந்திய தரப்பு தெரிவிக்கின்றது.

'காஷ்மீர் நட்புறவு தினம்' என்பதன் போர்வையில் இத்தகைய தினத்தை பாகிஸ்தான் கொண்டாடுவதன் பின்னணியில் வேறு உள்நோக்கம் உள்ளதாக அவதானிகள் கூறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. காஷ்மீர் விடயத்தில் இந்தியா கடைப்பிடித்து வருகின்ற கொள்கைக்கு கண்டனம் தெரிவிப்பதும், இந்தியா மீதான கண்டனங்களை சர்வதேச ரீதியில் பரப்புவதுமே பாகிஸ்தானின் மற்றொரு மறைமுக முயற்சியாகுமென்று சர்வதேச அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இதற்கான உதாரணமொன்றையும் சர்வதேச நோக்கர்கள் முன்வைக்கின்றனர். அதாவது 'காஷ்மீர் தினம்' என்பதன் போர்வையில் பல நாடுகளிலுள்ள தூதரகங்களில் பாகிஸ்தான் நடத்துகின்ற நிகழ்வுகளில் இந்தியாவுக்கு எதிரான கருத்துகளே முன்வைக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது இந்த நிகழ்ச்சிகளில் பாகிஸ்தானின் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு எதிரான கருத்துகளையே முன்னிலைப்படுத்தி உரைகளை ஆற்றுவதைக் காண முடிவதாக சர்வதேச அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அதேசமயம் இவ்வாறான நிகழ்வுகளின் போது இந்தியாவுக்கு எதிரான கோட்பாடுகளைக் கொண்டவர்கள் சொற்பொழிவாளர்களாக அழைக்கப்பட்டு பாகிஸ்தானின் 'காஷ்மீர் தினம்' தொடர்பான கருத்தை வலியுறுத்தும் வகையிலான உரைகளும் ஆற்றப்பட்டுள்ளதாக இராஜதந்திர முக்கியஸ்தர் ஒருவர் சுட்டிக் காட்டியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

இதுஒருபுறமிருக்க காஷ்மீர் தினத்தன்று பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுவதும் வழமையான நடைமுறையாகவுள்ளது. அந்த ஆர்ப்பாட்டங்கள் அனைத்துமே இந்தியாவுக்கு எதிராகவே அமைந்து விடுவது வழமையாகும்.இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை நடத்துவதன் மூலம் பாகிஸ்தான் மக்களை மாத்திரமன்றி, காஷ்மீரில் வாழும் மக்களையும் இந்தியாவுக்கு எதிரானவர்களாகத் திருப்புவதே பாகிஸ்தானின் நோக்கமென்று இந்திய தரப்பில் குற்றம் சாட்டப்படுகின்றது.

இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை ஊக்குவிப்பதானது, தீவிரவாதத்தை ஊக்குவிப்பதற்கு வழியேற்படுத்தி விடுமென்று இந்திய தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது. இந்தியா வசமுள்ள காஷ்மீரை பாகிஸ்தான் தனது நாட்டின் பகுதியாக்குவதற்காக நீண்ட காலமாக முயற்சித்து வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவின் எல்லைக்குள் உள்ள காஷ்மீருக்கு தீவிரவாதிகள் நுழைவதும், அங்கு இந்தியப் படையினருக்கு எதிராக தாக்குதல்களை நடத்துவதும் நன்கு தெரிந்த விடயங்களாகும். இவ்வாறு தீவிரவாதிகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவுவதை பாகிஸ்தான் தொடர்ந்தும் ஊக்குவித்து வருவதாகவும், அதனைத் தடுப்பதற்கு பாகிஸ்தான் முயற்சி மேற்கொள்ளவில்லையென்றும் இந்தியா குற்றம் சாட்டி வருவது தெரிந்ததே.

ஆனாலும் காஷ்மீரில் இந்தியப் படையினர் மிகவும் பலமான நிலையில் உள்ளனர். பாகிஸ்தானின் எல்லைப் பகுதியில் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுக்கும் வகையில் இந்தியப் படையினர் பாதுகாப்பை உறுதியாகவே வைத்துள்ளனர்.

இந்திய இராணுவம் பாதுகாப்பு வழங்குவதன் காரணமாக காஷ்மீர் பிரதேசம் அனைத்து வழிகளிலும் அபிவிருத்தியடைந்து வருவதுடன், அங்கு அமைதியும் நிலவும் வேளையிலேயே 'காஷ்மீர் நட்புறவு தினம்' என்பதன் பேரில் பாகிஸ்தான் தினமொன்றை அனுஷ்டிக்கத் தொடங்கியது. இவ்வாறான தினம் வருடாவருடம் பாகிஸ்தானின் ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பாகிஸ்தான் சர்வதேசரீதியில் மாறுபட்ட சிந்தனையை புகுத்தும் உள்நோக்கிலேயே இவ்வாறான தினத்தை அனுஷ்டிக்கத் தொடங்கியுள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்தியாவின் வசமுள்ள காஷ்மீர் பற்றி இந்தியாவுக்கு எதிரான அபிப்பிராயத்தைப் பரப்பும் நோக்குடனேயே 'காஷ்மீர் தினம்' அனுஷ்டிக்கப்படுவதாக அந்த அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால் இவ்விதமான செயற்பாடுகள் மூலம் பாகிஸ்தான் மக்களுக்கும் காஷ்மீர் மக்களுக்குமிடையே நட்புறவு ஏற்படப் போவதில்லை என்று அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். காஷ்மீரின் அபிவிருத்திக்கு இவ்வாறான செயற்பாடுகள் உதவப் போவதில்லையென்றும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பாகிஸ்தான் எவ்வளவுதான் மறைமுக வழிகளில் முயற்சி மேற்கொண்டாலும், ஜம்மு காஷ்மீரில் வன்முறைகள் தற்போது பெருமளவில் குறைந்துள்ளன. அங்கு அபிவிருத்திப் பணிகளும் தற்போது அதிகளவில் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அங்கு சுற்றுலாப்பயணிகளின் வருகை படிப்படியாக அதிகரித்து வருகின்றது. காஷ்மீர் மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகளும் அதிகரித்து வருகின்றன.

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரை பாகிஸ்தானுடன் இணைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் பாகிஸ்தான் செயற்பட்டு வந்தாலும், காஷ்மீர் பிரதேசம் அமைதிப் பூங்காவாக இருப்பதையே அங்குள்ள மக்கள் விரும்புகின்றனர்.

எஸ். சாரங்கன்...

# மருந்து விநியோகஸ்தர்களுக்கு பிணைமுறி வழங்க அமைச்சரவை இணக்கம்



## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல

(எம்.ஏ.அமீனுல்லா)

மருந்து பொருட்களுக்கான விநியோகஸ்தர்களுக்கு 60 பில்லியன் ரூபா வழங்கப்படவேண்டிய போதிலும் மருந்து இறக்குமதியில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காக மருந்து விநியோகஸ்தர்களுக்கு பிணைமுறி வழங்க அமைச்சரவை இணக்கம் கொண்டிருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று (20) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல,

சுமார் 90% மருந்து விநியோகஸ்தர்கள் இதற்கு சம்மதம் தெரிவித்திருப்பதால், அடுத்த காலாண்டில் இந்நாட்டில் மருந்து தட்டுப்பாடு 80–90% வரை குறையும் என்றும் அமைச்சர் கூறினார்.

இறக்குமதி செய்யப்படும் மருந்துகளுக்கு பணம் இல்லாமையால், மருந்துகளை விநியோகம் செய்யும் விநியோகஸ்தர்களின் பலம் குறைந்துள்ளன. இந்நிலையில் இவ்வாறு பிணைமுறி வழங்கப்படுவதால், அப்பிரச்சினை மறைந்துவிடும்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக நோயாளர்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை கொண்டு வரும் நடவடிக்கையை சீர்குலைக்கும் திட்டம் சில வைத்தியர்களின் உதவியுடன் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் அதுதொடர்பான அனைத்துத் தகவல்களும் எதிர்காலத்தில் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளை சரியான நேரத்தில் கொண்டு சேர்ப்பதே சுகாதார அமைச்சின் இலக்காகும் எனவும் தெரிவித்தார்.

பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் மருந்துகளை இறக்குமதி செய்துள்ளதாக ஒரு சிலர் குரல் எழுப்பி வருகின்றனர். ஆனால், இறக்குமதி செய்யப்படும் மருந்துகளை பயன்படுத்துவதால் நோயாளர்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அதற்கு சுகாதார அமைச்சு பொறுப்பேற்கும்.

தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதலின் கீழ் மருந்துகளை கொண்டு வருவதற்கு 06 முதல் 12 மாதங்கள் வரை தேவைப்படும் எனவும் பொதுவாக ஐரோப்பிய ஒன்றியத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் பயன்படுத்தும் மருந்தை இந்த நடைமுறைக்கு வெளியே கொண்டு வருவதால் எந்தபாதிப்பும் ஏற்படாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் 186 மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக டெண்டர் கோரப்பட்டதாகவும், அதில் மூன்று வகையான மருந்துகளுக்கு மட்டுமே டெண்டர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் மருந்து நிறுவனங்களுக்கு அரசாங்கம் சுமார் 60 பில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளதாகவும் இதன் காரணமாக மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு நிறுவனங்கள் முன்வருவதில்லை. மேலும் அத்தியாவசியமற்ற சத்திரசிகிச்சைகளுக்கான திகதிகள் ஒத்திவைக்கப்படுவது இதற்கு முன்னரும் நாட்டில் இடம் பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனவரி மாதத்தில், நாட்டின் மொத்த வருமானம் 145 பில்லியன் ரூபாவாக விருந்தது, ஆனால் செலவு 380 பில்லியன் ரூபாவாகும், அதில் 82 பில்லியன் சம்பளத்திற்காகவும், 27 பில்லியன் ஓய்வூதியத்திற்காகவும், 16 பில்லியன் சமூர்த்தி கொடுப்பனவுக்கும் மற்றும் மீதமுள்ள 10 பில்லியன் சுகாதார நடவடிக்கைகளுக்காகவும் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நுவரெலியா மாநகரசபை ஐ.தே.க உறுப்பினர் தெரிவு



தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா மாநகரசபைக்கு புதிய உறுப்பினராக கல்யாணி சத்தரசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கான நியமன கடிதத்தை ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாலித்த ரங்கே பண்டார வழங்கினார்.

இதன்படி ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை காரியாலயமான சிறிகொத்தாவில் நேற்று (20) திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வின்போது ஐ.தே.க பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார நியமன கடிதத்தை வழங்கினார். முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க முன்னிலையில சத்திய பிரமாணம் செய்து நுவரெலியா மாநகரசபை உறுப்பினர் பதவியை கல்யாணி சத்தரசிங்க பெற்றுக்கொண்டார். நுவரெலியா மாநகரசபை உறுப்பினராகவிருந்த மஹிந்த சில்வாவிற்கும் ஐக்கிய தேசிய கட்சிக்குமிடையில் ஏற்பட்ட கட்சி முரண்பாட்டையடுத்து ஐக்கிய தேசிய கட்சி அங்கத்துவ உரிமையையும் நுவரெலியா மாநகரசபை உறுப்புரிமையிலிருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளார்.

இந்த உறுப்புரிமை நீக்குவது தொடர்பாக நீதிமன்றத்திலும் வழக்கு நடைபெற்றது. நுவரெலியா மாநகரசபையில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு கடந்த நுவரெலியா மாநகரசபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் பட்டியல் சார்பில் போட்டியிட்ட திருமதி கல்யாணி சத்தரசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். முன்னாள் அமைச்சரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நவீன் திஸாநாயக்க முன்னிலையில் மாநகரசபை உறுப்பினராக கல்யாணி சத்தரசிங்க சத்திய பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்.இந்நிகழ்வில் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.பியதாஸ, ஐ.தே.க. முக்கியஸ்தர்களான சமல் சேனாரத், சாகல ரட்னாயக்க ஆகியோரும் கலந்துக்கொண்டனர்.

## கொஸ்லந்த, கபரகல பகுதிகளுக்கு புதிய பஸ்சேவை ஆரம்பம்

(ஊவா சுழற்சி நிருபர்)

கொஸ்லந்த, கபரகல ஆகிய வைத்தியசாலைகளுக்கு செல்லும் மக்களின் நலன்கருதி புதிய பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் சமுர்த்தி வங்கிக்கு செல்லும் முதியவர்கள் நலன்கருதி புதிய பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பூனாகலை தோட்டம் மற்றும் கொஸ்லந்தைக்கும் இடையில் மட்டுப்படுத்தப்பட்ட பஸ்சேவையொன்றே இடம்பெற்றது. அவ்வாறு இடம் பெற்ற பழைய பஸ் வண்டி அடிக்கடி பழுதடைந்த நிலையில் போக்குவரத்துச் சேவையில் இதுவரை காலமும் ஈடுபட்டு வந்தன. இதன் காரணமாக கொஸ்லந்த மற்றும் கபரகல ஆகிய தோட்ட வைத்தியசாலைக்கு செல்லும் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் சமுர்த்தி வங்கிக்கு செல்லும் முதியவர்கள் உள்ளிட்ட தோட்ட மற்றும் கிராமப்புற பொதுமக்களும் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்து வந்துள்ளனர். இதனையடுத்து ஹல்துமுல்லை பிரதேச சபை தலைவர் எஸ்.அசோக்குமார் பண்டாரவளை இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகளிடம் கலந்துரையாடி நேற்றுமுன் தினம் நவீன பஸ் வண்டியொன்றை பெற்றுக் கொடுத்துள்ளார்.

## மலைச்சாரல்



பசறை கல்வி வலயத்துக்குட்பட்ட தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலை மாணவி கமல்ராஜ் அபினயா 149 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவருக்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வாழ்த்துகளை தெரிவிக்கின்றனர்.
(படம் – லுணுகல நிருபர்)



பாராளுமன்ற உறுப்பினர் வேலுக்குமார் தலைமையில் உடப்பளாத்த பிரதேச சபை, கம்பளை நகர சபை, கங்கை இகல பிரதேச சபை, பஸ்பாகை கோரல பிரதேச சபைகளில் போட்டியிடும் வேட்பாளர்களை சந்திக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (படம் – கம்பளை நிருபர்)

## வடக்கின் உதயம்

# திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் நிகழ்வு நாளை

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை (22.03.2023) புதன்கிழமை திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞானசுரபி' தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் ஆரம்பகால இயக்குநர்களில் ஒருவரும், ஊறணி பங்குத்தந்தையுமான அருள்பணி தி.இ.தேவராஜன் அடிகள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார். பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்துகொள்ள விரும்புபவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 30 ஆம் 31 ஆம் திகதிகளிலும் ஏப்ரல் மாதம் 01 ஆம் 02 ஆம் திகதிகளிலுமாக நான்கு நாட்களுக்கு 'குருதி கழுவிய குவலயம்' என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

# 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும்; யாழில் அர்ஜூன் சம்பத் தெரிவிப்பு

யாழ்.விசேட நிருபர்

13ஆம் திருத்த சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமென இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்தார்.

சிவராத்திரியை முன்னிட்டு இலங்கையிலுள்ள ஐந்து ஈச்சரங்களையும் தரிசிப்பதற்காக தமிழகத்திலிருந்து வருகைதந்த இந்து மக்கள் கட்சியினர் யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் ஊடக சந்திப்பொன்றை நடாத்தினர். இதன்போது கருத்து தெரிவிக்கும் போதே அக்கட்சியின் தலைவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கம் இலங்கை மக்களுக்காக தமது சொந்த நிதியில் யாழ்ப்பாணம் மத்திய கலாசார நிலையத்தை உருவாக்கி கையளித்துள்ளது. கட்டடத்தொகுதி யாழ். மாநகர சபையிடம் கையளிக்கப்பட வேண்டும். ஈழத் தமிழர்களுக்காக இந்தியா தொடர்ந்தும் குரல் கொடுக்கவும் செயற்படவும் தயாராக இருக்கின்றது. 13ஆம் திருத்தம் தொடர்பில் சிலர் அறியாமல் பேசுகின்றனர். 13ஆம் திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும். இங்கு நடைபெறுகின்ற மதமாற்றங்கள் மற்றும் இந்து மதத்திற்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பிலும் நாம் கவனத்தில் கொள்வோம். திருகோணமலையிலுள்ள திருகோணேச்சர ஆலயம் தொடர்பாகவும் அங்கு தொல்லியல் திணைக்களத்தினரின் செயற்பாடுகள் தொடர்பாகவும் நாங்கள் இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வோம் என்றார்.




# உருத்திரபுரம் வாள்வெட்டுச் சம்பவம்; சந்தேகநபர் கைது

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் ஒருவர் வெட்டிப்படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் பகுதியில் கடந்த 13ஆம் திகதி மரணவீடொன்றில் இடம்பெற்ற கருத்து முரண்பாட்டையடுத்து இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் வாள்வெட்டில் முடிவடைந்தது. சிவநகர் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய சண்முகசுந்தரம் யசோதரன் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்ததுடன் நான்கு பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இச்சம்வத்துடன் தொடர்புபட்ட மேலும் ஒரு சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸாரால் (18) கைது செய்யப்பட்டுள்ளார். நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து சந்தேக நபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை இச்சம்பவத்துடன் தொடர்புபட்ட மேலும் இரு சந்தேகநபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டு 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



தென்மராட்சி சரசாலை வடக்கு பாலர் முன்பள்ளியின் மழலைகள் விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற்றது. முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத்தலைவர் சபிதா சுகந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் சரோசாதேவி அரியநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக சரசாலை வடக்கு முத்துமாரி அம்மன் ஆலய பூசகர் ஞானசேகரம், த.மகேஸ்வரக்குருக்கள் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் ஆ.தங்கவேலு மற்றும் சரசாலை வடக்கு ஐக்கிய நாணய சங்கத் தலைவர் ச.தர்மசீலன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்நிகழ்வில் சிறப்பம்சமாக மழலையர்களின் விளையாட்டு நிகழ்வுகள், மழலைகளுக்கான பரிசளிப்பு,விருந்தினர்கள் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. (படம் – சாவகச்சேரி விஷேட நிருபர்)

## யாழ். நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் பெண்ணொருவருக்கு விளக்கமறியல் உத்தரவு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நடவடிக்கையின் போது இடையூறாக செயற்பட்ட பெண்ணொருவர் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நடவடிக்கைகள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வேளை போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபரை பார்க்க அவரது தாயார் வந்துள்ளார். அவர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறாக மகனை சந்திக்க முற்பட்டுள்ளார்.

அப்பெண்ணை அமைதி பேணுமாறு நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். எனினும் அவர் சத்தமிட்டதனால் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்தை புரிந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் பெண் மீது வழக்குத் தொடரப்பட்டு மன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

வழக்கை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் சந்தேக நபரை வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# நகர்வலம்





வரலாற்றுப் பிரசித்திப் பெற்ற கண்டி தலதா மாளிகையின் ஜனரஜ பெரஹரா 34 வருடங்களுக்கு பிறகு நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஆகியோர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டு வீதி வலம் வந்த போது பிடிக்கப்பட்ட படம்.

# கஹட்டோவிட்டவில் சிறப்பாக இடம்பெற்ற கல்வி நிகழ்வு




(மொறட்டுவ மத்திய விசேட நிருபர், எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மேல் மாகாணத்தில் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற முஸ்லிம் மாணவ மாணவியர்களுக்கான கௌரவிப்பும் பரிசளிப்பு விழாவும் கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்க்கிள் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

கொழும்பு முஸ்லிம் கல்வி முன்னேற்ற சங்கம் மற்றும் கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்க்கிள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்தாபகத் தலைவரும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளருமான எம்.இஸட். அஹமட் முனவ்வர் தலைமை வகித்தார்.

11 ஆவது தடவையாக இடம்பெற்ற இந்நிகழ்வில், தென்கிழக்குப் பல்கலைக்கழக புதிய வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா பிரதம அதிதியாகவும், டாக்டர் ஷாபி சிஹாப்தீன் கௌரவ அதிதியாகவும், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளர் அஷ்ஷெய்க் அல்ஹாபிழ் அர்கம் நூராமித் சிறப்புப் பேச்சாளராகவும் தொழிலதிபர் எம்.வை.எம்.பிஸ்ருல் முபீல், கொழும்பு ஸாஹிராக் கல்லூரி அதிபர் ஏ.ஆர்.எம். றிஸ்வி மரிக்கார் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் தொழிலதிபர் எம்.வை.எம்.முகர்ரம், பேராசிரியர் எம்.ஜே.எம்.ராசி, அபிவிருத்திக்கும் பயிற்சிக்குமான இலங்கை நிறுவனத்தின் செயலாளர் அஷ்ஷெய் எஸ்.எல். நௌபர், தொழிலதிபர் ஆர். பாலசுப்ரமணியம், மூஷான் இன்டர்நேஷனல் தவிசாளர் முஸ்லிம் ஸலாஹுத்தீனின் புதல்வர் மூஷான் ஸலாஹுத்தீன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் மற்றும் சமூகத்தின் கொடை வள்ளல்கள், தனவந்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தெரிவு செய்யப்பட்ட 125 பேருக்கும் கடந்த 10 வருடங்களாக வழங்கி வந்த சான்றிதழ், பதக்கம், பொற்கிழி, பாராட்டு என்பன இம்முறையும் வழங்கப்பட்டன.

மௌலவிகளான எம்.என்.எம். இஜ்லான் (காஷிமி), எஸ்.எல். நௌபர், அப்துஸ்ஸலாம், அஸ்ஹர் பாகவி ஆகியோர் நிகழ்வில் வாழ்த்துரை வழங்கினர்.

கந்தானையில் அதிரடிப்படையினர் சுற்றிவளைப்பு

# 4 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

கந்தானை தெற்கு படகம, எக்ஸத் வீதியில் விசேட அதிரடிப்படை வீரர்கள் திடீரென மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான ஒன்றரை கிலோ கிராம் எடையுள்ள பிரவுண் சுகர் வகையைச் சேர்ந்த ஹெரோயின் போதைப்பொருளுடன் 31 வயதுடைய நபரொருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

அதிரடிப்படை வீரர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பேரிலேயே மேற்படி சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை (17) மேற்கொள்ளப்பட்ட குறித்த சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதோடு அவரை விசாரணை செய்தபோது, மேற்படி பிரதேசத்தில் வாடகை வீடொன்றில் அமர்ந்து கொண்டு போதைவஸ்துக் கடத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டு வந்ததாகவும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

சந்தேக நபருக்கு உதவியாக வெளிநாடொன்றில் வசிக்கும் நபரொருவர் பூரணமான ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாகவும் அதிரடிப்படை வீரர்கள் மேற்கொண்ட தீவிர விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

# இரத்தினபுரி வழி பாதையில் சுற்றாடல் மாசு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சிவனொளிபாதமலை யாத்திரிகர்களின் இரத்தினபுரி வழியான பிரதான பாதையின் இருமருங்கிலும் சுற்றாடல் மாசடைந்துவருவதாக சுற்றாடலியலாளர்கள் உட்பட பொது மக்கள் முறையிடுகின்றனர்.

இரத்தினபுரி, பலாங்கொட, குருவிட ஊடான பாதைகள் காணப்படுகின்றன.

யாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களுக்கு ஊடகங்கள் மற்றும் ஏனைய வழிகள் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கி வருகின்ற போதிலும் இவ்விடயங்களில் சில யாத்திரிகர்கள் அலட்சியமாக நடந்து கொள்வதால் இவ்வீதிகளில் சுற்றாடல் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் புனித நோக்கத்துடன் யாத்திரைகளை மேற்கொள்ளும் பக்தர்களுக்குப் பெரும் தடங்கல்கள் ஏற்பட்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட பலரும் முறையிட்டுள்ளனர்.

# மோ. சைக்கிள் விபத்தில் 17 வயது இளைஞன் பலி

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

கந்தானை பொலிஸ் பிரிவிலுள்ள வெலிகம்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் கார் வாகன விபத்தில் 17 வயதுடைய இளைஞரொருவர் பலியானதாக கந்தானை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை (17) பின்னேரம் இடம்பெற்ற குறித்த விபத்தில் ஜா எல, கபுவத்த, கன்னியாராம வீதியைச் சேர்ந்த 17 வயதுடைய ஸ்டேஃபன் நிமேஷ் ஜயலத் என்பவரே பலியானார். மோட்டார் சைக்கிளினை மிகவும் வேகமாக செலுத்திக் கொண்டு வந்த மேற்படி இளைஞன் வேகத்தை கட்டுப்படுத்த முடியாததால் எதிராக வந்து கொண்டிருந்த மோட்டார் காருடன் மோதி விபத்துக்குள்ளானதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. கடுமையான காயங்களுக்குள்ளான இளைஞனை உடனடியாக ஜா எல மாவட்ட ஆஸ்பத்திரியில் அனுமதித்த போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.



சென்னையில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள பிரபல ஆன்மீக பேச்சாளரான தென்றல், கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி பாபா ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று சொற்பொழிவு ஆற்றினார். ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் பேச்சாளரை கௌரவிப்பதையும், நிகழ்வில் பங்கேற்ற மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கே.டி. குருசாமி மற்றும் பஜனை பாடுவோரையும் படத்தில் காணலாம்.

# பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் ரமழான் பஸார்

ருஸைக் பாரூக்




கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியர்களின் சங்கம் ஒழுங்கு செய்த “மர்ஹபா ” 'ரமழான் வர்த்தக விற்பனை கண்காட்சி 2023' கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதனை பழைய மாணவியர்களின் சங்க உப தலைவி திருமதி பெரூசா முசம்மில், அதிபர் திருமதி நஸ்ரியா முனாஸ் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்களின் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் கல்லூரியின் பழைய மாணவி திருமதி சபியா மஹ்மூத் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைத்தார்.

உணவு, ஜவுளி, அழகுசாதனப் பொருட்கள், வீட்டு உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், மெஹந்தி போன்ற கிட்டத்தட்ட 130க்கும் மேற்பட்ட விற்பனை அறைகள் இந்தக் கண்காட்சியில் காணப்பட்டன.

பழைய மாணவியர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்லூரி மாணவியர்கள் உட்பட 10,000 க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்துகொண்டனர்.

பிரதி அதிபர் திருமதி ரஸ்மியா அபூபக்கர், பழைய மாணவியர்களின் சங்கம் செயலாளர் ஷகீலா ஹசன், பொருளாளர் உமாரா ரசாக் மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்திற்கு 6 வருட பூர்த்தி

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 6 வருடங்கள் நிறைவு பெறுவதை முன்னிட்டு கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கிளிநொச்சி கந்தசாமி கோயில் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திற்கு நேற்றுடன் ஆறு ஆண்டுகள் நிறைவடைந்து ஏழாவது ஆண்டில் கால் பதிக்கின்றது.

இந்நிலையில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு வருடங்களை நினைவுபடுத்து முகமாக நேற்றைய தினம் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. கந்தசாமி கோவில் முன்னிலையிலிருந்து கிளிநொச்சி டிப்போ சந்தி வரை A 9 வழியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பெற்றோர்கள் கைகளில் கருப்புக் கொடிகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நோர்ட்டனில் கோர பஸ் விபத்து







நல்லதண்ணியிலிருந்து கொழும்பு மஹரகம நோக்கி சிவனொளிபாதமலை யாத்திரிகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்ததோடு, 21 பேர் படுகாயமடைந்துள்ளதுடன், ஐவர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக நோர்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

*(படங்கள்: ஹற்றன் சுழற்சி, நோட்டன் பிரிட்ஜ், ஹற்றன் விசேட, கினிகத்தேனை, மஸ்கெலிய தினகரன் நிருபர்கள்)*

# புத்தளம் எம்.எப். கேக் நிறுவனத்தின் கண்காட்சி



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் எம்.எப். கேக் நிறுவனத்தின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் அண்மையில் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் ஏ.எச்.எம்.அஸ்வர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், புத்தளம் மற்றும் கற்பிட்டி பிரதேச அபிவிருத்தி குழு தலைவருமான அலி சப்ரி ரஹீம் கலந்து கொண்டார்.

நிறுவனத்தில் பயின்றவர்களின் பல்வேறு விதமான கேக் வகைகள் இங்கு கண்காட்சிக்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பயிற்சி நெறியை நிறைவு செய்தவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் இதன்போது சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினருடன் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை அதிபர் ஐ.ஏ.நஜீம், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் ஜவ்சி ஜமால்தீன், பாராளுமன்ற உறுப்பினரின் யாழ். கிளிநொச்சி மாவட்ட இடம்பெயர்ந்த மக்களின் இணைப்பாளர் ஆசிரியர் அமீர் அலி, கல்வி இணைப்பாளர் ஆசிரியர் அஸ்லம் ஆகியோரும் கலந்து கொண்டனர். பாராளுமன்ற உறுப்பினரின் சேவைகளை பாராட்டி ஏற்பாட்டுக் குழுவினரால் அவர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மாநகரசபை - குருநாகல்

## பெறுகை அறிவித்தல்

குருநாகல் மாநகர சபைக்குத் தேவையான நீர் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திறந்த போட்டி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | உபகரணம் | தேவைப்படும் அளவு | மாதிரி |
|---|---|---|---|
| 01 | 1/2, நீர் மீட்டர் | 500 | கேள்வி ஆவணத்துடன் பெற்றுக்கொள்ளலாம் |

படிவக்கட்டணம் (மீளளிக்கப்படாத) ரூ.3,000+ வெட் 11115% கேள்வி பிணை வைப்பு / கேள்விப்பிணை ரூ.20,000.00 மேற்படி உபகரணத்தை பெற்றுக்கொள்வதற்காக ஐந்து வருட அனுபவம் உள்ள அரசில் பதிவுசெய்த நிறுவனங்களில் இருந்து திறந்த தேசிய போட்டி விலைமனுக்களை கோருவதற்கு குருநாகல் மாநகர சபையின் மாநகர ஆணையாளர் தீர்மானிதுள்ளார். மேலே குறிப்பிடப்படும் கேள்வி கோரலுக்கான கேள்வி ஆவணங்களை 2023.02.20 முதல் 2023.03.12 பி.ப.2.00 வரை அலுவலக நேரங்களில் குருநாகல் மாநகர சபையின் கணக்குத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2023.03.13 பி.ப.2.00 இற்கு மாநகர சபை கமிட்டி கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்டுவதுடன் கேள்விதாரருக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம். ஏனைய விபரங்கள் கேள்வி ஆவணத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.


**விபரங்களுக்கு**

தொலைபேசி இல : 0374941869
ஈமெயில் : ginumviyadam@gmail.com
பெக்ஸ் : 0372228136

**மாநகர ஆணையாளர்**
**மாநகரசபை**
**குருநாகல்**
**2023.02.21**

# கலாபொல கண்காட்சியில் பங்குகொள்ளும் திஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி




*கலாபொல 2023 கண்காட்சி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதில் திஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி மாணவர்கள் சுமார் 350இற்கும் அதிகமானோர் பல்வேறு படைப்பாக்கங்களுடன் 123,124,125 ஆகிய காட்சிக்கூடங்களில் காட்சிப்படுத்தினர். சுமார் 300இற்கும் அதிகமான தேசிய சர்வதேச ஓவியர்கள் பங்குகொள்ளும் இக்காட்சியில் கலந்து கொண்ட ஒரே பாடசாலை திஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது.*

## புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் பிக்கு உட்பட ஏழு பேர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கலன்பிந்துனுவெவ கறுவலகஸ்வெவ பகுதியில் புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய பிக்கு ஒருவர் உள்ளிட்ட ஏழு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்றுமுன்தினம் சுற்றிவளைப்பில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேக நபர்களை கைதுசெய்ததுடன் ஜீப்வண்டியொன்றையும் கைப்பற்றியுள்ளனர். மேலும் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்களும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன. கைதான பிக்கு 40 வயதுடைய நிட்டம்புவ பகுதியிலுள்ள விஹாரையொன்றில் வசிப்பவராவார். சந்தேக நபர்கள் 22,26,28,45,46,48 வயதுகளையுடைய கெட்டலாவ, மெகொடவெவ, நிட்டம்புவ, மற்றும் பசியால பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலன்பிந்துனுவெவ பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம் (CEDPL)

## கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல் - 2020 / 2021

**தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு மாணவர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 21.03.2023 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**

**தேவைப்படும் தகைமைகள்** : க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் (2020 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முந்திய பரீட்சை) ஆகக்குறைந்த சித்திகளுடன் பொதுச் சாதாரணப் பரீட்சையில் (General Common Test) குறைந்தபட்சம் 30% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**கட்டணம்** : **ரூபா. 120,000.00**

**மொழி மூலம்** : கற்கைநெறியின் முதலாம் வருடம் தமிழ் மொழியிலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடங்கள் தமிழ் ஆங்கில மொழிகளிலும் நடைபெறும்.

**தெரிவு செய்யப்படும் முறை** : நேர்முகப்பரீட்சை மற்றும் நுழைவுப்பரீட்சை

**விண்ணப்ப முடிவுத் திகதி** : **21.03.2023**

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பத்தினை செயற்படுத்துவதற்கான கட்டணமாக **ரூபா. 1500.00** ஐ செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை, பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற பற்றுச் சீட்டினை (Paying-In-Voucher - PIV) பூரணப்படுத்தி எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்த முடியும். மேலும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக இணையத்தளத்திலுள்ள நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை (https://forms.gle/unWPxv1jNGQpsLH67) பூர்த்தி செய்து அனுப்புவதோடு அதன் பதிவிறக்கம் செய்யப்பட்ட அச்சுப்பிரதியை அறிவுறுத்தல்களுக்கு அமைய முறைப்படி ஒப்பமிட்டு **பிரதி பதிவாளர், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பு - 2020 / 2021"** எனக்குறிப்பிட வேண்டும். பூரணப்படுத்தப்படாத அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**மேலதிக தகவல்கள் மற்றும் நிகழ்நிலை விண்ணப்ப படிவத்தினை பல்கலைக்கழக இணையத்தளமான https://www.seu.ac.lk/cedpl/ ல் பெற்றுக்கொள்ளமுடியும்.**

பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்
21.02.2023

**மீன்பிடித்துறை அமைச்சு**

**இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)**

## வட மாகாண கிவுல்திய இறால் வளர்ப்பு மேற்கொள்பவர்களுக்கான அறிவித்தல்

1. 1998 இலக்கம் 53 உடைய இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டம், 2008 இறால் நீர்வாழ் உயிரின வளர்ப்பு முகாமைத்துவம் (வளர்ப்பு வட்டத்தினை செயற்படுத்தல்) கட்டளைக்கேற்ப இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை, மற்றும் இறால் வளர்ப்பு மேற்கொள்வோர் சங்கத்துடன் கலந்துரையாடி, வட மாகாணத்திற்கு 2023 ஜனவரி மாதம் முதல் எதிர்வரும் காலத்திற்கு சமர்ப்பிக்கும் வலய திட்டம் மற்றும் வளர்ப்பு கால அட்டவணை பின்வருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

| வலயம் | உப வலயம் | ஆதரவுகளை வைப்புச் செய்ய வேண்டிய கால வரையறை |
|---|---|---|
| வடக்கு மட்டக்களப்பு | 1. காவத்முனை | **SPF** ***Penaeus monodon***<br>முதல் வளர்ப்பு வட்டம் - 2023.03.20 - 2023.04.20<br>இரண்டாவது வளர்ப்பு வட்டம் - 2023.09.01 - 2023.09.30 |
| | 2. மீராவோடை | **SPF** ***Penaeus monodon***<br>முதல் வளர்ப்பு வட்டம் - 2023.03.20 - 2023.04.20<br>இரண்டாவது வளர்ப்பு வட்டம் - 2023.09.01 - 2023.09.30<br>**SPF** ***Litopenaeus vannamei***<br>முதல் வளர்ப்பு வட்டம் - 2023.02.05 - 2023.05.05<br>இரண்டாவது வளர்ப்பு வட்டம் - 2023.06.05 - 2023.07.05.<br>மூன்றாவது வளர்ப்பு வட்டம் - 2023.10.05 - 2023.11.30 |
| | 3. வட்டவான் இறால் பண்ணை கட்டிடம் | **SPF** ***Litopenaeus vannamei*** இறால் வளர்ப்பு மேற்கொள்ளலில் ஊட்டுதல் கால அட்டவணைக்கு அப்பாற் மேற்கொள்ள முடிவதோடு முன்னர் ஊட்டிய காலத்தின் அறுவடையை பெற்றுக்கொண்ட 45 நாட்களின் பின்னரே புதிய வளர்ப்பினை மேற்கொள்ள நீர் நிரப்ப முடியும். |
| | 4. கரமுனை | **SPF** ***Litopenaeus vannamei***<br>முதல் வளர்ப்பு வட்டம் - 2023.06.01 - 2023.07.01<br>இரண்டாவது வளர்ப்பு வட்டம் - 2023.10.01 - 2023.11.01 |
| மேற்கு மட்டக்களப்பு | 1. கரயாகந்திவ் | **SPF** ***Penaeus monodon***<br>முதல் வளர்ப்பு வட்டம் - 2023.02.15 - 2023.03.15<br>இரண்டாவது வளர்ப்பு வட்டம் - 2023.08.01 - 2023.09.05 |
| | 2. ஈவ்வந்திவ் | **SPF** ***Penaeus monodon***<br>முதல் வளர்ப்பு வட்டம் - 2023.03.20 - 2023.04.20<br>இரண்டாவது வளர்ப்பு வட்டம் - 2023.09.01 - 2023.09.30 |
| | 3. முதலைக்குடா | **SPF** ***Penaeus monodon***<br>முதல் வளர்ப்பு வட்டம் - 2023.03.15 - 2023.04.15<br>இரண்டாவது வளர்ப்பு வட்டம் - 2023.09.15 - 2023.10.15 |
| | 4. முதலைக்குடா வணிக நீர்வாழ் வளர்ப்பு | முதல் வளர்ப்பு வட்டம் - 2023.06.01 - 2023.08.01<br>வளர்ப்பு செயற்படுத்தப்படும் அளவுக்கேற்ப வளர்ப்பிற்கான எல்லை நீளுதல் கீழ்வருமாறு<br>1. சிறிய அளவு – **SPF Penaeus monodon**<br>2. நடுத்தர அளவு – **SPF** ***Penaeus monodon*** or ***Litopenaeus vannamei***<br>3. பெரிய அளவு – Only **SPF** ***Litopenaeus vannamei*** |
| மட்டக்களப்பு நகரம் | 1. மட்டக்களப்பு நகரம் (Air Force பண்ணை) | **SPF** ***Penaeus monodon***<br>முதல் வளர்ப்பு வட்டம் - 2023.03.30 - 2023.04.30<br>இரண்டாவது வளர்ப்பு வட்டம் - 2023.08.30 - 2023.09.30 |

2. (அ) வலயம் மற்றும் உப வலயங்களின் எல்லைகள் தொடர்பான விபரங்களை இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பிலுள்ள கரையோர நீர்வாழ் வளர்ப்பு செயற்றிட்டம் மற்றும் மதிப்பாய்வு ஒன்றியத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஆ) NAQDA விசேட அனுமதியின் கீழ் வளர்ப்பு மற்றும் ஊட்டுதல் கால அட்டவணைக்கு அப்பால் வளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள பண்ணைகள் தவிர்த்து ஏனைய அனைத்து உப வலயங்களிலுள்ள பண்ணைகளில் வளர்ப்பு மற்றும் ஊட்டுதல் அட்டவணைக்கேற்ப குஞ்சுகளை வைப்பு செய்த திகதி முதல் 06 மாதத்திற்குள் வளர்ப்பினை மேற்கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

(இ) இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு செயற்றிட்ட மற்றும் மதிப்பாய்வு ஒன்றியத்தில் உரிய வலய அலுவலகங்களின் ஊடாக இறால் குஞ்சுகளை வழங்குதல் மற்றும் போக்குவரத்திற்கான அனுமதி பத்திரமற்ற கிவுல்திய இறால் பொரிப்பகங்களில் குஞ்சுகளை வழங்குதல், வளர்ப்பு மேற்கொள்பவர்களால் கொண்டு செல்லல் அல்லது பண்ணையினுள் வைப்பு செய்தல் என்பவற்றை மேற்கொள்ள கூடாது.

3. சகல பண்ணைகளும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு முகாமைத்துவ அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதோடு அவ்வாறு அனுமதிப்பத்திரமின்றி வளர்ப்பு செயற்பாடுகளை ஆரம்பிக்கும் பண்ணை உரிமையாளர்களுக்கு எதிராக 1996 இலக்கம் 02 எனும் மீன்பிடி மற்றும் நீர்வாழ் வளங்கள் சட்டத்திற்கு கீழ் சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மேலதிக விபரங்கள்:**
**கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு செயற்றிட்டம் மற்றும் மதிப்பாய்வு ஒன்றியம் - வட மாகாணம்**
**கரையோர வீதி, புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு.**
**தொலைபேசி: 065 - 2054588**

**தலைவர்**
**இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை**
**இலக்கம் 41/1 புதிய பாராளுமன்ற வீதி**
**பெலவத்த பத்தரமுல்ல**
**தொலைபேசி : 011-2786495**

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்கு உலர் (மூலிகை) ஔடதங்களை வழங்கல்களிற்காக கேள்வி கோரல் – 2023 முதலாம் காலாண்டு

இத்திணைக்களம் வழங்கும் கேள்வி மாதிரிப்படிவங்களில் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 'மீளளிக்கப்படாத' படிவக் கட்டணத்தை இத்திணைக்களத்தில் காசாகச் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட கேள்விகளுடன் பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் ஆதனச் சான்றிதின் (பொது 170 மாதிரிப்படிவத்தில்) மூலப்பிரதியும், கேள்விப் பிணைத் தொகையை செலுத்தி இருப்பதும் கட்டாயமாகும்.

| வழங்கல் தன்மை | மீளளிக்கப்படும் கேள்விப் பிணையம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | இப்பத்திரிகை அறிவித்தல் தினத்திலிருந்து 06 மாதங்களிற்குள் வழங்கப்பட்ட ஆதனச் சான்றிதழ் |
|---|---|---|---|
| ஊவா மாகாண ஆயுர்வேத மத்திய களஞ்சிய சாலைக்கு (மூலிகை) ஔடதங்களை வழங்கல் | காசாகச் செலுத்துவதாயின் 100,000.00<br>வங்கி வரைவு ஒன்றெனின் 200,000.00 (இப்பிணையமானது கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 120 நாட்களிற்குச் செல்லுபடியாகுதல் வேண்டும்) | 2,000/- | 500,000/- |

2023.02.22 முதல் 2023.03.14 அன்று பி.ப. 2.00 வரை வார வேலை நாட்களில் இத் திணைக்களத்தின் அலுவலகத்தில் இதற்கான கேள்வி மாதிரிப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

முத்திரையிடப்பட்ட கேள்விகள் இரண்டு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி எனத் தனித்தனி உறைகளில் சேர்த்து தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'உலர் (மூலிகை) ஔடதங்களை வழங்கல் 2023 முதலாம் காலாண்டு தியத்தலாவ ஆயுர்வேத திணைக்களம்' எனக் குறிப்பிட்டு 2023.03.15 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் தலைவர், பெறுகைக்குழு, ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களம், தியத்தலாவை, என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது பெறுகைக் குழுவின் தலைவரின் அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம்.

கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

சமர்ப்பிக்கப்படும் கேள்விகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளல் நிராகரித்தல் அல்லது பகுதியொன்றை மாத்திரம் ஏற்றுக் கொள்ளல் தொடர்பாக முழுமையான உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும். இது தொடர்பான மேலதிக விபரங்களை தொலைபேசி இல. 057 2229173 என்ற இலக்கத்தின் மூலம் திருமதி. அனுபமாவை அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**ஊவா மாகாண ஆயுர்வேத திணைக்களம்.**

# பெறுகை அறிவித்தல்

## சுந்தராபொல திண்மக் கழிவுகள் முகாமைத்துவ திட்டத்தில் உக்கிப்போகாத மற்றும் கழிக்கப்பட்ட பொருட்களின் விண்ணப்பதாரிகளை பதிவுசெய்தல்

கீழ்க்காணும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பதிவுசெய்வதற்கு விரும்பும் அரச பதிவுடனான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2023.02.21 முதல் 2023.03.12 பி.ப.2.00 வரை "மாநகர ஆணையாளர், மாநகரசபை, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கையோடு ஒப்படைக்கலாம். விண்ணப்பங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் 2023 ஆம் ஆண்டில் சுந்தராபொல திண்மக் கழிவுகள் முகாமைத்துவ திட்டத்தின் உக்கிப் போகாத மற்றும் கழிக்கப்பட்ட பொருட்களின் விண்ணப்பதாரிகளைப் பதிவு செய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

01) காட்போர்ட்
02) வெள்ளைத்தாள்
03) கடதாசி
04) பொக்ஸ்போர்ட்
05) டின்
06) பெட்டி போத்தல்
07) பிளாஸ்டிக்
08) பொலித்தீன்
09) கண்ணாடி துண்டுகள் (வெள்ளை)
10) கண்ணாடித் துண்டுகள் (கலர்)

**"பேல் செய்து வழங்கப்படும்**

**நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகள்**

01) விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது, அவ் விண்ணப்பத்தில் வியாபாரத்தின் பெயர், தொடர் இலக்கம் உட்பட, தொலைபேசி இலக்கம், வெட் இலக்கம் அடங்குதல் வேண்டும். வியாபர பெயர் பதிவுச்சான்றிதழின் போட்டோப்பிரதியையும் விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.

02) மீளளிக்கப்படாத பதிவு செய்தல் கட்டணமாக வெட் உடன் ரூ.1500.00 அறவிடப்படுவதுடன், காசாக அல்லது காசோலை மூலம் மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். காசோலைகள் " மாநகர ஆணையாளர், மாநகரசபை, குருநாகல்" என்ற பெயரில் அனுப்பப்படல் வேண்டும். காசுக்கட்டளைகள் ஏற்கப்பட மாட்டாது.

03) கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் குழு ஒன்றினால் பரீட்சித்துப் பார்க்கப்பட்டு தகைமையான வழங்குநர்கள் பதிவு செய்ப்படுவர்.

04) பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், பட்டியலில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுதல் சாதாரணமாக செயற்படுவதுடன், தேவைப்படும் வேளையில் அதற்கு அப்பாலும் மட்டுப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் கோருதல் மற்றும் சேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் உரிமை சபைக்கு உரியது.

05) விலைமனுக்கள் கோரும்போது மூன்று தடவைகள் பதில் அளிக்கப்படாது விடின் உங்களது பதிவு இரத்துச் செய்யப்படும்.

06) இதுபற்றிய மேலதிக விபரங்களை பிரதம மாநகர கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

07) தேவைப்படும் வேளையில் விலைமனுக்களை கோரும்போது அந்தந்த சந்தர்ப்பத்திற்கேற்ப மற்றும் பொருட்களின் தன்மையின் பிரகாரம் நிபந்தனைகள் உள்ளடக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
**விபரங்களுக்கு**
தொலைபேசி இல : 0374941869
ஈமெயில் : ginumviyadam@gmail.com
பெக்ஸ் : 0372228136

**மாநகர ஆணையாளர்**
**மாநகரசபை**
**குருநாகல்**
**2023.02.21**

The Housewives' companion
Classifieds on
Daily News

# பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 20 மார்ச் 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 20 மார்ச் 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 20 மார்ச் 2023 | இல. 134, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 21 மார்ச் 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 22 மார்ச் 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 23/27 மார்ச் 2023 | இல. 44, ஹில்ஸ் ஸ்ட்ரீட், கண்டி. |
| 28/29 மார்ச் 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபி. |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE
இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

**பெயர்மாற்றம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், இல.23/7A, விஹாரவத்த வீதி, பத்திரகொட, மஹரகம இல் வசிக்கும் எனது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாவது விஷ்மிலா நதீஷானி என்பதாகும். அதில் என் தகப்பனின் பெயர் எஹலபிட்டிய ஹேவாகே பாலித பிரேமதாஸ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இன்று முதல் என் விருப்பத்திற்கமைவாக, என் பெயரை எஹலபிட்டிய ஹேவாகே விஷ்மிலா நதீஷானி பிரேமதாஸ என உபயோகிப்பேன் என இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

**எஹலபிட்டிய ஹேவாகே விஷ்மிலா நதீஷானி பிரேமதாஸ**

Repeat Your Ad For Better Offers

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### 2023/2024 ஆம் ஆண்டிற்காக உணவக கட்டிடத் தொகுதியில் சமைக்கப்பட்ட உணவு விற்பனை நிலையத்தை நடத்திச் செல்லல்

01. தங்கியிருக்கும் நோயாளர்கள், வைத்தியசாலைக்கு வருகைதரும் உறவினர்கள் மற்றும் வைத்தியசாலையின் ஊழியர்களின் பாவனைக்காக நுகேகொட, தலபத்பிட்டியவில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் உணவக கட்டிடத்தொகுதியின் கீழக்காணும் விற்பனை நிலையத்தை நடத்திச் செல்லக்கூடிய ஆற்றல் உடைய இலங்கை பிரஜைகள், வர்த்தக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள் (ஒப்பந்தக்காரர்கள்) இடமிருந்து ஒரு வருட காலத்திற்கு தேசிய போட்டி விலைமனுக்கோரலின் கீழ் பெறுகைக்குழுத் தலைவரால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | இலக் கம் | விற்பனை நிலையத்தின் பெயர் | குறைந்தபட்ச மாதாந்த வாடகை ரூபா | கேள்விப் பிணை ரூபா | விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | Q-111 /23 | சமைக்கப்பட்ட உணவு விற்பனை நிலையம் | 156,000.00 | 20,000.00 | 3500.00 |

02. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளரிடம் மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு மற்றும் நிறுவனத்தின் கடிதத்தலைப்புடன் பணிப்பாளரிடம் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல வேண்டுதலை வழங்கல் பிரிவில் சமர்ப்பித்து 2023.03.15 வரை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் கேள்விப் பத்திரங்களை வழங்கல்கள் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு வேறுவேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. குறித்தவாறு கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையை இட்டு விண்ணப்பங்களை கடித உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "2023/2024ம் ஆண்டிற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் சமைக்கப்பட்ட உணவு விற்பனை நிலையங்களை நடத்திச் செல்லும் ஒப்பந்தம்" என்று குறிப்பிட்டு 2023.03.16 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு இங்கு கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அம் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்தின் பின்பு உடனடியாக விண்ணப்பங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரி அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும் கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் அத்துடன் திறக்கப்படாமலேயே திருப்பி ஒப்படைக்கப்படும்.

05. குறித்த கேள்வியை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.

06. எதிர்ப்பார்க்கும் விண்ணப்பதாரிகளுக்கு கேள்வி பத்திரங்களை எந்த கட்டணமும் இல்லாமலேயே ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவில் பரீடசிக்கலாம்.

07. மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பெறுகைப்பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இல : 11-2778610 - நீடிப்பு 3142 அல்லது 011-2778624

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர**
**பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய**



**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை**

# கேள்வி அறிவித்தல்

## அகற்றப்படாத கப்பற்சரக்கின் விற்பனை

**கேள்வித் திகதி: 07.03.2023**
**கேள்வி இல.: 451 மற்றும் 451-ஏ**

கொழும்புத் துறைமுகத்திலுள்ள களஞ்சியசாலைகள் மற்றும் திறந்தவெளிகளிலுள்ள பின்வரும் கப்பற் சரக்கை கொள்வனவு செய்து மற்றும் அகற்றுவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன.

**கேள்வி இல.: 451**

| | | |
|---|---|---|
| Secondary Interior Doors | Tyres (Bra Dow Icc) | Diesel Exhaust Fluid |
| Gas Stove | Rough Marble Blocks | Toughened Glass |
| Marble Blocks | Empty Tin | Solar & Wind Power System |
| Steel Plate | Coir Fiber | Ivory Board |
| Stage Items & Musical Instruments | Lithium Batteries | Chemicals |
| Laminated Beech Vencer Lumber | other Merchandise etc., | -------------------------------- |

**கேள்வி இல.: 451-ஏ**

| | | |
|---|---|---|
| Electrical Accessories | Household Items | Garment |
| Pigment | Horse Feeds | Used Machinery |
| Tile Grout | Wall putty | Fabric |
| Motor Spare Parts | Food items | other merchandise etc., |

2023.02.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணியிலிருந்து 2023.03.03 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் வேலை நாட்களில் 451 ஆம் இலக்க கேள்வியின் கீழுள்ள அம்சங்களுக்காக 5,000 ரூபா (மற்றும் பெசேவ மற்றும் SSCL) மற்றும் 1,000,000 ரூபா மீளளிக்கப்படும் வைப்புத் தொகையையும் 451-ஏ ஆம் இலக்க கேள்வியின் கீழுள்ள அம்சங்களுக்காக மீளளிக்கப்படாத கட்டணமாக 1000 ரூபா (மற்றும் பெசேவ மற்றும் SSCL) மற்றும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக முறையே 50,000 ரூபா, 200,000 ரூபா அல்லது 500,000 ரூபா ஆகியவற்றை உங்கள் முன்வைப்புக்களுக்கமைவாக ஏற்புடையதாகவாறு செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி, 15 ஆம் இலக்கத்திலுள்ள கெனல் திறந்தவெளியின் One-Stop ஆவணமாக்கல் நிலையத்தின் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் லொஜிஸ்டிக்ஸ் பிரிவு, விற்பனை பிரிவின் அலுவலகத்திலிருந்து கேள்விப் பட்டியல்களை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு **www.slpa.lk** என்ற இணையத்தை பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்),**
**21.02.2023**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல. 15, லோட்டஸ் வீதி,**
**கொழும்பு-01.**

# சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**108 நிஸான் கார் விற்பனைக்கு**

18 - 0168 Nissan Sunny, 1988 Car அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி , இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0711210810 011103

**113 சுசூகி கார்கள் விற்பனைக்கு**

SG CAR - 0082 Suzuki wagon R, 2015, Car அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்03, தொலைபேசி 071 1210810 011101

**117 வேன்கள் விற்பனைக்கு**

54 - 4279 Toyota, 1988, Van அதியுயர் விலைக்கு. வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி இல. 31P, காலி வீதி, கொழும்பு03. தொலைபேசி 0714 542958 011099

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

CP QV-1295 Bajaj, 2009, WP QD-0212 Bajaj, 2005, WP QW-6619 Bajaj, 2010, WP ABD-3695 Bajaj, 2015, SG YP-8160 Bajaj, 2011, Three wheel அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு3, தொலைபேசி 0711 210810 011097

**128 டயர்கள், டியூப்புகள் விற்பனைக்கு**

டயர்டியூப் JCB பெகோ மோட்டர் கிரேடர் கார், வேன், லொறி புதிய மற்றும் நிரப்பியவை இருக்கும் இடத்திற்கு போக்குவரத்து. கூடிய தொகையை ஏன் செலுத்த வேண்டும் ஆர்பிடைக் நிரப்பும் போது. 700x16780x16 900x20 1000x20 அழையுங்கள் கூடிய வியாபாரம் குறைந்த இலாபம். 155, கிரவுன் டயர் கொழும்பு 14. 0773134060. 010369

SUNDAY OBSERVER adz
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரූ. 500/- (Except Thinakaran Varamanjari) | ரූ. 700/- (Except Thinakaran Varamanjari) | ரූ. 950/- |

COLOMBO DISTRICT

AVISSAWELLA 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

ANGODA 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

ATHURUGIRIYA 011 2760479, 011 4876968
267, Godagama Road,

BATHTHARAMULLA 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

BORALESGAMUWA 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

HANWELLA 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

HOKANDARA 071 8685437
No. 501, North Hokandara,

HOMAGAMA 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

KADUWELA 011 2579609
Nayana Bake House

KADUWELA 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

KALUBOWILA 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

KESBEWA 011 2703415
Seedevi Newspaper Office, 19, Horana Rd,

KIRULAPONE 071 5439396, 011 2514166
Ramani Book Shop, 27-A High Level Rd,

KOTTAWA 011 2842569, 071 2510950
Srisara Groceries, No. 101/2,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380









# பேருவளை, தர்காநகர் ஈன்றெடுத்த கலைஞன் பாஸி ஸுபைர்





அறிவிப்பாளர், எழுத்தாளர், கைப்பணியாளர், கைவரைஞர் என்று பல்துறை கலைஞராகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் தர்காநகர் பாஸி ஸுபைர், களுத்துறை மாவட்டத்தின் ஊடகவியலாளர் பலருக்கும் பலவகையிலும் கை கொடுக்கும் பொதுநலப் பிரியராகவும் விளங்குகிறார். அத்துடன் நூல் வெளியீட்டு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு பிரதி ஒன்றை வாங்கி எழுத்தாளர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் பரோபகாரப் பண்புடையவராகவும் திகழ்கிறார்.

இவை அத்தனைக்கும் இவர் பணம் படைத்த ஒருவர் அல்லர். ஆனால் குணம் படைத்தவர் என்று சுருக்கமாக குறிப்பிடலாம். நற்குண, நற் பண்புக்கு இலக்கணமாகத் திகழும் பாஸி ஸுபைர் தர்கா நகரைச் சேர்ந்த முகம்மது ஸுபைர் உம்முல் யஹியா தம்பதியின் புதல்வராக 1970 பெப்ரவரி 26 ஆம் திகதி பிறந்தார். 1975 ஆம் ஆண்டு அல்ஹம்றா மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் தர்காநகர் ஸாஹிறாக் கல்லூரியில் இணைந்து க.பொ.த. சாதாரண தரம் வரை கற்று குடும்பப் பொருளாதார நெருக்கடி காரணமாக தொழிலில் இறங்கினார். இவர் படிக்கும் ஆரம்ப கட்டத்திலேயே சித்திரங்கள் வரைவதில் ஆர்வம் காட்ட ஆரம்பித்தார். அதேபோன்று பேச்சு, அறிவிப்புத் துறையிலும் சிறந்த ஈடுபாடு காட்டி வந்தார். பாடசாலையில் மாணவர் மன்றம் மற்றும் பாடசாலை வைபவங்களில் எல்லாம் அறிவிப்பாளராக, நிகழ்ச்சித் தொகுப்பாளராக தனது அறிவிப்புத் துறையை வளர்த்து வந்தார். பின் நாட்களில் தொழில்துறையில் கால் வைத்த போது வெளியார் மேடை நிகழ்ச்சிகளில் அறிவிப்பாளராகக் கடமையாற்றி உழைக்க ஆரம்பித்தார். அத்துடன் படிக்கும்போது ஆர்வம் காட்டி வந்த கைப் பணி, சித்திரம் வரைதல் என்பனவும் இவரது உழைப்புக்கு கை கொடுக்கவே செய்தன. சிறு சிறு கடைகள், அமைப்புகள் போன்றவற்றுக்கு பெயர் பலகைகள், அறிவித்தல் பலகைகள் என்பன வரைந்து கொடுக்கும் தொழிலிலும் இறங்கி செயலாற்றி வரலானார். பாடசாலை பருவத்தில் பத்திரிகைகளுக்கு சிறு துணுக்குகள், ஆக்கங்கள் எழுதுவதில் ஈடுபட்டு வந்த பழக்கம் பின்னரும் தொடர்ந்து, எழுத்தாளராகவும் தன்னை வளர்த்துக் கொண்டார். இதன் விளைவாக களுத்துறை மாவட்ட இளம் எழுத்தாளர் சங்கம் உருவாகவும் இவர் பகீரத பங்களிப்புச் செய்துள்ளார்.

இதேபோன்று தர்காநகர் தினகரன் வாசகர் வட்டம் என்ற அமைப்பின் உருவாக்கத்திலும் விடாமுயற்சியுடன் செயலாற்றி 2012 ஆம் ஆண்டு அல்ஹம்றா மகாவித்தியாலயத்தில் அச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அதை இன்று வரை இயங்க உறுதுணை புரிந்து வருகிறார். 2022ஆம் வருட ஆரம்பத்தில் தினகரன் பத்திரிகையின் 90 ஆவது ஆண்டு நிறைவு விழா நாடளாவிய ரீதியில் மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அதன் ஓர் அங்கமாக தர்காநகர், பேருவளை பிரதேசத்தை உள்ளடக்கிய பிரதேசத்திலும் கோலாகலமாக நடாத்தப்பட்டது. பாஸி ஸுபைர் அதன் ஏற்பாட்டுக் குழுத் தலைவராக இருந்து மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி மற்றும் பரிசளிப்பு, பாராட்டு, கௌரவிப்பு உள்ளிட்ட நிகழ்வுகளை மிகவும் வெற்றிகரமாக நடாத்தி பலரதும் பாராட்டைப் பெற்றுக் கொண்டார்.






இவரின் இப்பணிகளை கௌரவித்து லேக் ஹவுஸ் நிறுவனம் சார்பாக பாராட்டு நினைவுச்சின்னமும் சான்றிதழும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாஸி ஸுபைர், சமூக சேவைகளிலும் தன்னை அர்ப்பணிப்புச் செய்து வருகிறார். அவர் வசதி படைத்தவரல்லாவிடினும், அரசியல் வாதிகள் மற்றும் தனவந்தர் பெருமக்களுடனும் நெருக்கமான உறவு வைத்து, அவர்களினூடக சமூகத்துக்கும் பிரதேசத்துக்கும் அவசியப்படும் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் முன்நின்று உழைத்து வருகிறார். இதற்காக 'பாஸி ஸுபைர் மன்றம்' என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கி சமூகப் பணிகளில் ஈடுபடுகிறார். 2004 ஆம் ஆண்டு சுனாமிப் பேரலை பேருவளை கடற்கரையை அண்டிய பகுதியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதன் போது பாஸி ஸுபைர் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளிலும் மும்முரமாக ஈடுபடலானார். உலருணவுப் பொருட்களை சேகரித்து விநியோகிப்பதில் இவரது தலைமையிலான குழுவே முதன் முதலாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் வெளி மாவட்டங்களுக்கும் உதவிகள் வழங்குவோருடன் இணைந்து செயற்பட்டுள்ளார்.

பேருவளை பொலிஸ் நிலையம் மற்றும் தர்கா நகர் அல் ஹம்றா மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு கொடிக்கம்பங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளார். பொலிஸ் பொது மக்கள் உறவுப் பிரிவின் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் சில்வாவின் வேண்டுகோளின் பேரில் பொலிஸ் நிலையத்திற்கு கொடிக்கம்பம் அமைத்துக் கொடுக்கப்பட்டதோடு அதற்காக அவரை பாராட்டி களுத்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கபில பிரேமதாஸவினால் சான்றிதழும் வழங்கப்பட்டது.

தர்கா நகர் இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட 25 வீடுகளுக்கு 100 பிலாஸ்ரிக் கதிரைகளையும் அன்பளிப்புச் செய்தார். அத்தோடு பாதிக்கப்பட்ட பாடசாலை சிறார்களுக்கு அப்பியாச புத்தகங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இவர் சிங்கள, முஸ்லிம் இன உறவை கட்டியெழுப்ப அயராது உழைத்து வருகிறார். அதன் ஓர் அங்கமாக பேருவளை ஸபுகொட பௌத்த விகாரைக்கு சக்கர நாற்காலிகளையும் கையளித்தார். இவரின் இப்பணிக்காக விகாராதிபதி கிணியாவள பாலித தேரோ பாராட்டுத் தெரிவித்தார். தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத்தின் முக்கிய பதவி வகித்த இவர் அச் சங்கத்தினூடாகவும் பல பணிகளை மேற்கொண்டார். கொரோனா நோய் ஏற்பட்ட காலகட்டத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் களைஞர்களை தேடிச் சென்று பல வகையிலும் உதவிகளைச் செய்தார்.





2013 ஆம் ஆண்டு தர்கா நகர் உள்ளிட்ட பகுதிகளில் இனக் கலவரம் மூண்ட போது அதில் பாதிக்கப்பட்ட வீடுகளில் உள்ள மாணவர்களுக்கு அவசர அவசரமாக கற்றல் உபகரணங்களை முதன் முதலாக வழங்கி, தங்கு தடையின்றி கல்வியில் தொடர வழி செய்தார். 2018 ஆம் ஆண்டு இவரின் மன்றத்தினால் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள மாணவர்களுக்கு உபகரணங்கள் கற்றல் உபகரணங்கள் வழங்கும் வைபவம் ஒன்றை தர்கா நகர் அல் ஹம்றா கல்லூரியில் நடத்தினார். அதில் பிரதம அதிதியாக அப்போதைய டிஜிட்டல் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சராக இருந்த அஜித் பி. பெரேரா கலந்துகொண்டார். அவ்வைபவத்தில் நெறியாளுகை மற்றும் அறிவிப்பாளராக செயற்பட்ட பாஸி ஸுபைர் இப்பாடசாலைக்கு முழு நிறைவான கணினிக் கூடம் ஒன்றின் தேவை குறித்து மிகவும் உருக்கமானதொரு வேண்டுகோளை சபையில் முன் வைத்தார். அதனை செவிமடுத்த இராஜாங்க அமைச்சரினால் 18 இலட்சம் ரூபாய் செலவில் சகல வசதிகளுடன் கூடிய கணணி கூடம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டமை பாஸி ஸுபைரின் சாதனை என்றே கூறலாம்.

பிரதேசத்தின் மற்றுமொரு பிரபல சமூக சேவையாளரான நஜீப் ஹாஜியாரின் பணிகளை வெளிக்கொணரும் முகமாக 'நெஞ்சம் நிறைந்த நஜீப் ஹாஜியார்' நூல் வெளியீட்டு குழுவுக்கு தலைமை தாங்கி அதனையும் வெற்றிகரமாக செய்து முடித்தார்.

அதே போன்று பிரதேசத்தின் ஆளுமைகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் 'முத்துக்கள் முப்பது' என்ற நூலையும் வெளியிட்டு தனது எழுத்துலகப் பயணத்தையும் தொடர்ந்தார். இவற்றுக்கு மேலாக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்து, சமூகத்துக்கும் நாட்டுக்கும் அரும் தொண்டாற்றிய முஸ்லிம் அரசியல் பிரமுகர்களின் வாழ்க்கை குறிப்புகள் அடங்கிய 'பாராளுமன்றத்தில் சுடர் விட்டோர்களுடன்' என்ற ஆவணத் தொகுப்பு நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டு தனது பயணத்தில் மற்றும் ஒரு மைல் கல்லைத் தொட்டார். 2018 ஆம் ஆண்டு நூலின் சிறப்பு பிரதியொன்றை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அவரது வாசஸ்தலத்திற்குச் சென்று கையளித்துள்ளார்.

இவரது எழுத்து, சித்திர வேலை, கைப்பணிகளுடன் மற்றுமொரு கை வண்ணக் கலையம்சமாக மணமக்கள் வீற்றிருக்கும் 'சிங்காசனம்' எனும் மணப்பந்தல் மேடைகளையும் வண்ண வண்ண வடிவங்களில் தயாரித்து வாடகைக்கு விட்டு வருகிறார். இப்பிரதேசத்தில் இது மிகவும் பிரபல்யம் பெற்று வருவதும் இவரது திறமை ஆற்றல்களுக்கு மற்றும் ஒரு சான்றாகவுள்ளது. சமூக ஊடகப் பணிகளுக்காக இவர் பல விருதுகளையும் பெற்றுள்ளார். ஊடகவியலாளர்களுடன் மிகவும் நெருங்கிய சிநேகம் வைத்துள்ள இவர் தனது சமூக மற்றும் கலைப் பணிகளுக்கு தினகரன் நாளிதழும் வார மஞ்சரியும் பல வழிகளிலும் ஊக்கம் தந்து கை கொடுப்பதாகவும் லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கும் நன்றி நவில்கிறார். தொடர்ந்தும் இவரது பணிகள் மென்மேலும் சிறக்க வாழ்த்துவோம்.

பேருவளை
பீ.எம்.முக்தார்...







# வனிந்துவை தக்கவைத்தது மென்செஸ்டர் ஒரிஜினல்ஸ்



இந்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறவுள்ள தி ஹண்ட்ரட் கிரிக்கெட் தொடரில் மீண்டும் மென்செஸ்டர் ஒரிஜினல்ஸ் அணிக்காக இலங்கை அணியின் நட்சத்திர சகலதுறை வீரர் வனிந்து ஹஸரங்க தக்கவைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் 27ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ள தி ஹண்ட்ரட் தொடருக்கு முன் ஒவ்வொரு அணிகளாலும் தக்கவைக்கப்பட்ட வீரர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு தி ஹண்ட்ரட் தொடரில் இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் வனிந்து ஹஸரங்கவை தமது அணியில் தக்க வைத்துக்கொள்வதற்கு மென்செஸ்டர் ஒரிஜினல்ஸ் அணி நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற தி ஹண்ட்ரட் தொடரில் மென்செஸ்டர் ஒரிஜினல்ஸ் அணிக்காக வனிந்து ஹஸரங்க ஒப்பந்தம் செய்யப்பட்டபோதிலும், அந்தத் தொடர் நடைபெற்ற காலப்பகுதியில் ஆசியக் கிண்ணம் மற்றும் டி20 உலகக் கிண்ணத் தொடர்களுக்கு தயாராக வேண்டியதன் காரணமாக அதில் பங்கேற்கும் வாய்ப்பை அவர் தவறவிட்டார்.

## மகளிர் டி20 உலகக் கிண்ணம்:

# நியூசிலாந்திடம் தோற்று இலங்கை வெளியேற்றம்



நியூசிலாந்துக்கு எதிரான தீர்க்கமான போட்டியில் 102 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்த இலங்கை அணி மகளிர் டி20 உலகக் கிண்ண அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது.

தென்னாபிரிக்காவின் பார்ல் நகரில் அரையிறுதிக்கு முன்னேற கட்டாயம் வெற்றிபெற வேண்டிய நிர்ப்பந்தத்துடன் கடந்த ஞாயிறன்று (19) களமிறங்கிய சாமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை அணி பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டம் இரண்டிலும் சோபிக்கத் தவறியது.

இதில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து மகளிர் 20 ஓவர்களுக்கும் 3 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களை பெற்றது. சுசி பெட்ஸ் (56) மற்றும் அமலியா கெர் (66) அதிரடி அரைச்சதம் பெற்றனர். இலங்கை ஏழு பந்துவீச்சாளர்களை பயன்படுத்தியபோதும் நியூசிலாந்து வீராங்கனைகளை கட்டுப்படுத்த முடியாமல்போனது.




இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய இலங்கை மகளிர் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். இதனால் அந்த அணி 15.5 ஓவர்களில் 60 ஓட்டங்களுக்கு சுருண்டது. இருவர் மாத்திரமே இரட்டை ஓட்டங்களை பெற்றனர்.

இலங்கை மகளிர் அணி குழு ஒன்றில் முதல் இரு போட்டிகளை வென்று குழுநிலையில் 4 புள்ளிகளை பெற்றபோதும் அதன் நிகர ஓட்ட விகிதம் குறைவாக இருப்பதால் மூன்றாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டது. இதனால் நியூசிலாந்து அணியும் 4 புள்ளிகளை பெற்றிருந்தபோதும் இரண்டாவது இடத்திற்கு முன்னேறி இருக்கும் நிலையில் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை அதிகரித்துக் கொண்டுள்ளது.

குழு ஒன்றில் இருந்து நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய மகளிர் அணி டி20 உலகக் கிண்ண அரையிறுதிக்கு ஏற்கனவே தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரக்பி லீக் மீண்டும் கண்டி அணி வசம்



கழகங்களுக்கு இடையிலான நிப்பொன் பெயின்ட் ரக்பி லீக் கிண்ணத்தை கண்டி விளையாட்டுக் கழகம் தோல்வியுறாத அணியாக தக்கவைத்துக் கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) நித்தவலயில் நடைபெற்ற கடைசி லீக் போட்டியில் சி.ஆர் அன்ட் எப்.சி அணியை எதிர்கொண்ட கண்டி 29–10 புள்ளிகளால் வெற்றியீட்டியது.




இதில் முதல் பாதியில் சி.ஆர் அன்ட் எப்.சி 10–0 என்ற புள்ளிகளால் முன்னிலை பெற்றிருந்தபோதும் இரண்டாவது பதியில் முழு ஆதிக்கம் செலுத்திய கண்டி அணி நான்கு ட்ரைகளை பெற்றது. இதன் மூலம் கண்டி அணி தொடர்ச்சியாக எட்டாவது முறையாக லீக் சம்பியனாக தெரிவானது.

கண்டி இம்முறை தொடரில் ஆடிய 10 லீக் போட்டிகளிலும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி கிங்ஸ்வூட் அணிக்கு வெற்றி

**அக்குறணை குறூப் நிருபர்**



பாடசாலைகளுக்கிடையிலான நட்புறவு ரக்பி போட்டியில் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி அணியிடம் மடவளை மதீனா மத்திய கல்லூரி அணி தோல்வியை சந்தித்தது. எனினும் அந்த அணி கடைசி வரை போராடி கௌரவமான தோல்வியை சந்தித்தது.

மடவளை மதீனா மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிறன்று (19) இடம் பெற்ற இப்போட்டியில் இடைவேளையின் போது இரு அணிகளும் புள்ளிகள் எதனையும் பெறவில்லை. ஆனால் இரண்டாம் பாதியில் கிங்ஸ்வூட் அணி வீரர்கள் இரண்டு ட்ரைகளை பெற்று 10–0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றனர்.

# இலங்கை ஏ அணியில் மத்தியூஸ் நீக்கம்



இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிராக இன்று (21) ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ள மூன்றாவது மற்றும் இறுதி டி20 போட்டிக்கான இலங்கை ஏ அணியில் இருந்து அஞ்சலோ மத்தியூஸ் நீக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தொடரின் முதல் இரு போட்டிகளிலும் விளையாடிய அனுபவ வீரர் மத்தியூஸ் இரண்டாவது போட்டியில் அரைச்சதம் ஒன்றை பெற்றிருந்தார். இந்நிலையில் நீக்கப்பட்ட மத்தியூஸுக்கு பதில் மாற்று வீரர் ஒருவர் சேர்க்கப்படவில்லை. மத்தியூஸ் தவிர்த்து இரண்டாவது போட்டியில் ஆடிய அதே அணியே இந்தப் போட்டியிலும் ஆடவுள்ளது.

நியூசிலாந்து சுற்றுப்பயணத்துக்காக இலங்கை அணி தயாராகிவருகின்ற நிலையில், ரதல்ல மைதானத்தில் நடைபெற்றுவரும் பயிற்சி முகாமில் மத்தியூஸ் இணைந்துக்கொண்டுள்ளார்.

இங்கிலாந்து லயன்ஸ் மற்றும் இலங்கை ஏ அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் 1–1 என சமநிலையுற்றிருக்கும் நிலையில் இன்றைய போட்டி தொடரைத் தீர்மானிப்பதாக உள்ளது.

# வெள்ளம், நிலச்சரிவால் பிரேசிலில் 36 பேர் பலி



தென் கிழக்கு பிரேசிலின் கரையோரப் பகுதியில் பெய்த அடை மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் குறைந்தது 36 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு நூற்றுக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதில் சாவோ சபஸ்டியானோ நகரம் முழுவதும் நீரில் மூழ்கி, மலைப்பகுதியில் உள்ள வீடுகள் சேற்று மண்ணில் அடித்துச் செல்லப்படுவது மற்றும் நெடுஞ்சாலைகள் நீரில் மூழ்கி வாகனங்கள் மீது மரங்கள் விழுந்து பெரும் அழிவுக்கு உள்ளாகியுள்ள காட்சிகளை தொலைக்காட்சிகள் மற்றும் சமூக ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

கடந்த ஞாயிறன்று சில பகுதிகளில் 600மி.மீ. மழை பெய்திருப்பதோடு இது ஒரு மாதத்தில் எதிர்பார்க்கப்படும் மழை வீழ்ச்சியின் இரண்டு மடங்காகும்.

உயிர்தப்பியோரை சென்றடைவதில் மீட்பாளர்கள் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். "டஜன் கணக்கானோர் காணாமல்போயிருப்பதோடு சுமார் 50 வீடுகள் உடைந்து வெள்ள நீரி அடித்துச் செல்லப்பட்டுள்ளன" என்று கடுமையாகப் பாதிக்கப்பட்ட சாவோ சபஸ்டியோனர் நகர மேயர் பெலிபே அகஸ்டோ தெரிவித்துள்ளார்.

குடிநீர் மற்றும் போக்குவரத்து நிறுத்தப்பட்டு உள்ளதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். அவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொடர் மழையால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

## சர்வதேச செய்திகள்

# பூகம்பம்: 2 மாகாணங்கள் தவிர்த்து துருக்கியில் மீட்பு நிறைவு



துருக்கி மற்றும் சிரியாவில் பூகம்பம் நிகழ்ந்து இரு வாரங்கள் கடந்திருக்கும் நிலையில் துருக்கியில் இரு மாகாணங்கள் தவிர்த்து ஏனைய பகுதிகளில் மீட்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இடிபாடுகளில் சிக்கி உயிர் தப்பியோரைத் தேடும் வேட்டை கரமன்மராஸ் மற்றும் ஹடாய் மாகாணங்களில் தொடர்ந்து இடம்பெறும் என்று துருக்கி அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. எனினும் உயிர் தப்பியோரை மீட்கும் நம்பிக்கை வேகமாக குறைந்து வருகிறது.

கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி இடம்பெற்ற பூகம்பத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 46 ஆயிரத்தை தாண்டியுள்ளது. எனினும் கடந்த சனிக்கிழமை முடிவுற்ற 24 மணி நேரத்தில் எவரும் உயிருடன் மீட்கப்படவில்லை.

இந்த பூகம்பத்தில் சுமார் 105,000 கட்டடங்கள் அழிவுற்று அல்லது பாதிக்கப்பட்டதோடு ஆயிரக்கணக்கான மக்கள் வீடற்றவர்களாக ஆக்கப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் தொடர்ந்து காணாமல்போன நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

இதேவேளை சிரியா நிவாரணப் பணிகளில் கூடுதல் கவனம் செலுத்துகிறது. கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள பகுதிகளுக்கு சர்வதேச உதவி சென்றுசேர்வதை உறுதிப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. துருக்கிக்கும் சிரியாவுக்கும் கூடுதலாக 100 மில்லியன் டொலர் உதவி வழங்க அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

துருக்கியில் பூகம்பம் நேர்ந்த பகுதிகளைப் பார்வையிட்ட பின் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்ட்னி பிளிங்கன் அது குறித்து அறிவித்தார்.

ஏற்கனவே 85 மில்லியன் டொலர் நிதி வழங்க வொஷிங்டன் ஒப்புதல் அளித்திருந்தது.

# விழுந்து உடைந்த 42,000 டொ. சிற்பம்



அமெரிக்காவில் 42,000 டொலர் மதிப்பான கண்ணாடி சிற்பம் ஒன்றை பார்வையாளர் ஒருவர் தற்செயலாக கீழே வீழ்த்தி உடைத்துள்ளார்.

மியாமியில் இடம்பெற்ற கண்காட்சியில் வைக்கப்பட்ட பிரபல கலைஞர் ஜெப் கூன்ஸின் 'பலூன் நாய்' என்ற சிற்பமே உடைந்துள்ளது. அதனை ஒரு பெண் கையால் தட்டிக்கொண்டிருந்தபோது அது விழுந்து உடைந்ததாக ஸ்டீபன் காம்சன் என்ற கலைஞர் பொக்ஸ் நியுஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

அந்தச் சிற்பத்தின் அங்கங்களைக் காட்சியக ஊழியர்கள் தரையிலிருந்து அகற்றுவதை ஒருவர் காணொளியாகப் பதிவுசெய்தார்.

# பேஸ்புக், இன்ஸ்டாகிராமில் 'கட்டண முறை' அறிமுகம்




பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் பயனர்களுக்கு தமது கணக்கை உறுதி செய்யும் 'புளூ டிக்' கட்டண முறையை அவைகளின் தாய் நிறுவனமான மெடா அறிமுகம் செய்துள்ளது.

இந்த முறையின்படி இணையத்தள பயனர்களுக்கு மாதத்திற்கு 11.99 டொலர்களும் ஐபோன் பயனர்களுக்கு மாதத்திற்கு 14.99 டொலர்களும் அறவிடப்படவுள்ளது. இந்த வாரத்தில் அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்தில் இந்த முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அடுத்ததாக அது அமெரிக்காவிலும் மற்ற நாடுகளிலும் வெளியிடப்படும்.

இது இந்த சமூக ஊடக செயலிகளின் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதாக அமையும் என்று மெடா தலைமை நிறைவேற்றுனர் மார்க் சக்கர்பேர்க் தெரிவித்துள்ளார்.

ட்விட்டர் உரிமையாளர் இலோன் மஸ்க் கடந்த நவம்பரில் பிரீமியர் ட்விட்டர் புளூ சந்தா முறையை அறிமுகப்படுத்திய நிலையிலேயே இந்த முறை கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேல் வான் தாக்குதலில் சிரியாவில் 15 பேர் உயிரிழப்பு



சிரிய தலைநகர் டமஸ்கஸில் இஸ்ரேல் கடந்த ஞாயிறன்று நடத்திய வான் தாக்குதலில் இரு பொதுமக்கள் உட்பட 15 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு கட்டடம் ஒன்று பெரும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

சிரிய அரச அதிகாரிகள் உட்பட தரப்பினர்களின் சந்திப்பு ஒன்றை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் கப்ரா சவுசா மாவட்ட வீதியில் பெரும் பள்ளம் ஒன்று ஏற்பட்டிருப்பதோடு அருகில் உள்ள 10 மாடி கட்டடம் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது என்று பிரிட்டனைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இதில் காயம் அடைந்த 20க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உளவுத்துறை அலுவலகம் மட்டுமின்றி பாதுகாப்புத் துறை அதிகாரிகள் அதிகளவில் இந்த கட்டடத்தில் வசித்து வந்ததாகக் கூறப்படுகிறது.

எனினும் இது பற்றி இஸ்ரேல் இராணுவத்தை ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் அணுகியபோது பதிலளிக்க மறுத்துள்ளது.

ஈரான் மற்றும் ஹிஸ்புல்லா போராளிகளை இலக்கு வைத்து சிரியா மீது இஸ்ரேல் அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றபோதும் அது பற்றி மிக அரிதாகவே வெளியுலகுக்கு உறுதி செய்கிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.